Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 04 (28.12.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்:88

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல் & மூக்குக் கண்ணாடியகம்



இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

## கூட்டணி எம்.பிக்களை வைத்து புலிகள் பயமுறுத்துகிறார்களாம்!

### இப்படிக் கூறுகிறார் ஆனந்தசங்கரி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான - இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் ரவிராஜ் ஆகியோரை வைத்து, விடுதலைப் புலிகள் தம்மைப் பயமுறுத்துவதாக கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

'ஏசியன் ரிபியூன்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

மரணம் என்பது ஒரு மனிதனுக்கு ஒரு முறைதான் வரும். தொடர்ந்தும் செத்துக்கொண்டிருக்கமுடியாது.

எனது 26 ஆவது வயதில் - 1956 ஆவது ஆண்டு, நான் அரசியல் நடவடிக்கையை ஆரம்பித்தேன். இப்போது என்னைப் பயமுறுத்துபவர்கள், நான் அரசியல் நடவடிக்கையை ஆரம்பிக்கும்போது பிறந்திருக்கவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு விரைவில் மின் விநியோகம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக மின்சார சபை 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் தகவலை கிளிநொச்சி பிராந்திய மின்சார சபை பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரு மாவட்டங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. உடனடியாக வேலைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவு கிடைத்துள்ளது. வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரைக்கும் தேசிய மின்சார விநியோக பாரிய திட்டம் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படும். இந்தத் திட்டம் 18 மாத காலத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு முன்பாக முல்லைத்தீவுக்கும் கிளிநொச்சிக்கும் தனித்தனியே மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கப்படவிருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

# ஈரானில் நடந்த பூமியதிர்ச்சியில் உயிரிழப்பு 40 ஆயிரமாக உயர்வு!

(தெஹ்ரான்)

**ஈரானின் பாம் நகரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பூமியதிர்ச்சியில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நாற்பதாயிரத்தைத் தாண்டலாம் என அஞ்சப்படுகிறது.**

நேற்றுமுன்தினம் அதிகாலை பாம் நகரத்தைத் தாக்கிய பூமி அதிர்ச்சியினால் சுற்றுப்புறத்திலிருந்த பல நகரங்களும் பாதிக்கப்பட்டன.

பூமியதிர்ச்சி தாக்கிய பிரதேசத்தில் வீடுகள், கட்டடங்கள் என்பன கிட்டத்தட்ட முழுமையான அழிவைச் சந்தித்திருப்பதால் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருகிறது.

கட்டடச் சிதைவுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை உயிருடன் மீட்பதற்கும், சடலங்களை மீட்பதற்கும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நேற்று நண்பகல் வரை பத்தாயிரத்துக்கும் அதிகமான சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேலும் சுமார் முப்பதாயிரம் பேர் வரை காணாமற்போயிருப்பதாகவும், சுமார் ஐம்பதாயிரம் பேர்வரை காயமடைந்திருப்பதாகவும் ஈரானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூமியதிர்ச்சியில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக முரண்பாடான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மீட்கப்படும் சடலங்கள் மற்றும் காணாமற்போனவர்களின் எண்ணிக்கையை கொண்டு இறந்திருக்கலாம் என கருதப்படுவோர் தொடர்பான சுமாரான மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மீனவர்கள் நால்வரும் பள்ளிக்குடா கடலில் பிடிபட்டனர்!

(கொக்குவில்)

இரணைதீவுக் கடலில் வைத்து காணாமற்போன 4 குருநகர் மீனவர்களும் பள்ளிக்குடா மீனவர் சங்கத்தவர்களினால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்

கடந்த 22 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற குருநகர் பகுதியைச் சேர்ந்த மீனவர்களான பெனடிக்ட் ரஞ்சன் (வயது 35), உதயகுமார் (வயது 37), ரவி (வயது 45), ஜெயக்குமார் (வயது 45) ஆகிய நான்கு பேரும் மறுநாள் அதிகாலை வரை வீடு திரும்பவில்லை.

இவர்களைத் தேடி படகின் உரிமையாளர்களும், மீனவர்களும் கடலுக்குச் சென்றபோது, நடுக்கடலில் படகு அநாதரவாகக் காணப்பட்டதை அவதானித்தனர்.

வெளியிணைப்பு இயந்திரம், வலை, திசையறி கருவிகள் என்பன எதுவுமில்லாத நிலையில் நின்ற படகை, அதன் உரிமையாளர்கள் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர். இந்த நான்கு பேரையும் தேடிச் சென்றும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பள்ளிக்குடா கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை அப்பகுதி மீனவர் சங்கத்தினரால் பிடித்துச்செல்லப்பட்டனர்.

குருநகர் பகுதி இயந்திர இழுவைப் படகுகளால் வன்னிப் பிரதேச சிறு மீன்பிடித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் குண்டுத் தாக்குதல்; இருபது பேர் படுகாயமடைந்தனர்!

## மதங்களுக்கிடையிலான மோதலுக்கு

சங்கத்தினரால் பிடித்துச்செல்லப்பட்டனர்.

குருநகர் பகுதி இயந்திர இழுவைப் படகுகளால் வன்னிப் பிரதேச சிறு மீன்பிடித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் குண்டுத் தாக்குதல்; இருபது பேர் படுகாயமடைந்தனர்!

(புத்தளம்)

புத்தளம் - கற்பிட்டியில் நடைபெற்ற கைக் குண்டுத் தாக்குதலில் 20 பேர் படுகாய மடைந்தனர்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கற்பிட்டி - கந்தில்குழியில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

இரு குழுக்களுக்கிடையே நடைபெற்ற மோதல் சம்பவம் வலுவடைந்ததையடுத்தே இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் களில் முதியவர் ஒருவர் உட்பட இரு சிறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மதங்களுக்கிடையிலான மோதலுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது!

### அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இனப்பிரச்சனையை அடிப்படையாகக் கொண்ட யுத்தத்தால் பேரழிவுகளை எதிர் நோக்கியுள்ள எமது நாட்டில் மதங்களுக் கிடையே மோதல்கள் ஏற்படுவதற்கு இட மளிக்க முடியாது என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று இடம்பெற்ற தகவல் தொழில்நுட்பத்துறைக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது, இந்த நாட்டில் 50 வருடங்களாக இனப்பிரச்சனை நிலவிவருகிறது. இருபது வருடங்களாக இனப்பிரச்சனைப் போர் நடை பெற்றுவருகிறது. இது எமக்கு தேவையற்ற விடயம் தான். மதங்களுக்கிடையெ நிலவிய முரண்பாடு ஆகும். இனங்களுக்கிடையே முரண்பாடுகள் இருந்தன. அந்த முரண்பாட்டி லிருந்து மீள்வதற்காகவே முயற்சிகள் செய் கிறோம். இதற்காகத்தான் கடந்த 2 வருடங்கள் பெற்றுக்கொண்ட சமாதானத்தைப் பெரும் பேறாகக் கருதுகிறோம். ஆனால் தற்போது, இல்லாத பிரச்சனையை ஏற்படுத்த முயல் வோருக்குத் தெளிவான பதிலை உடனடி யாகப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 10 வயது சிறுமியை 16 வயதுச் சிறுவன் வல்லுறவு!

(மன்னார்)

பத்து வயதுச் சிறுமியை 16 வயது நிரம்பிய சிறுவன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்திலுள்ள சாந்திக்குளம் மாதிரி வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்றது.

சிறுமி தனது வீட்டிற்கு அண்மையாக விளையாடிக் கொண்டிருந்த சமயம், 16 வயது நிரம்பிய சிறுவன் ஒருவன், சிறுமியை தனி மையான இடம்ஒன்றுக்குக் கூட்டிச் சென்று பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டசமயம் சிறுமி கத்தி அயலவர்களைக் கூப்பிட்டுள்ளார்.

அந்த இடத்துக்கு உடன் வந்த அயல வர்களின் உதவியுடன் சிறுமி மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பாலியல் பலாத்காரம் புரிந்த சிறுவன் மன்னார் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சமாதானப் பேச்சுக்கள் நிறுத்தம்; கூட்டமைப்பு விரைவில் ஆராயும்!

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முன்னெ டுக்கப்படாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நடவடிக்கையை எடுப்பது என்பது குறித்து விரைவில் ஆராயவுள்ளது.

இந்தத் தகவலை தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக் களையும் அரசாங்கத்திடமிருந்து ஜனாதிபதி பறித்தெடுத்த பின்னர் அரசியலில். பெரும் நெருக்கடி நிலை தோன்றியது. பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற் படும் என நாம் எதிர்பார்த்திருந்தோம்.

இதுவரை எந்தவிதமான இணக்கப்பாடும் ஏற்படாத நிலையில் நெருக்கடி வலுவடைந்து வருகின்றது. அரசியல் நெருக்கடிக்கு தீர்வு கண்டு இருவருக்கும் இடையிடையில் இணக் கப்பாடு எட்டப்படவில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

**பாதுகாப்பான, நம்பிக்கையான பாலியல் நடத்தை உங்களையும் உங்கள் சமூகத்தையும் எய்ட்ஸிலிருந்து பாதுகாக்கும்!**

**COMPUTER COURSES**

**New Batches Start on**

Batch 1: 03.01.2004
Batch 2: 05.01.2004
Batch 3: 14.01.2004
at 10.00 a.m

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)

# 100, Clock Tower Road, Jaffna. T.P : 021 222 2831

கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாகக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

# அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்புக்கு 317



இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் மெல்பேர்னில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று, அவுஸ்திரேலிய அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 317 ஒட்டங்களை எடுத்துள்ளது.

முன்னதாக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களுடன் நேற்று ஆட்டத்தைத் தொடங்கிய இந்திய அணி, 35 ஓட்டங்களுக்குள்ளேயே தமது மிகுதி விக்கெட்டுக்களை இழந்தது. முடிவில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 366 ஓட்டங்களை எடுத்தது. இதில் வீரேந்தர் ஷேவாக் 195, ஆகாஷ் சோப்ரா 48, ராகுல் ராவிட் 49 ஓட்டங்களை, அதிகூடிய ஓட்டங்களாக இந்திய அணி சார்பில் எடுத்திருந்தனர். இந்திய அணியில் நான்கு வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் சச்சின் டெண்டுல்கரும் அடக்கம்.

பின்னர் ஆடத் தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, மூன்று விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் மத்யூ ஹேய்டன் 136 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தற்போது ரிக்கி பொன்டிங் 120, டேமியன் மார்ட்டின் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

அவுஸ்திரேலிய அணி சார்பில் மக்கில் 3, பிரட்லீ 2, பிறக்கன், வில்லியம்ஸ், ஹட்றிச், ஸ்ரீவ்வோ ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்திய அணி சார்பில் கும்ளே 2, அகர்கர் 1 விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர்.



## சனசமூக நிலைய பொன்விழா

யாழ்ப்பாணம், ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலையத்தில் பொன்விழாவும், நூலகத் திறப்புவிழாவும் இன்று சனசமூக முன்றலில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் எஸ்.நவரட்ணம் அவர்களின் தலைமையில் மாலை 5.00 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் யாழ். அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நல்லூர் உதவி பிரதேச செயலர் திருமதி ரட்ணராஜா, நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் க.ஈஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

# பாகிஸ்தான் அணியினர் 2 விக்கெட் இழப்பிற்கு 52



நியூஸிலாந்திற்கு எதிராக வெலிங்டனில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களை எடுத்துள்ளது.

முன்னதாக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களுடன் நேற்றைய ஆட்டத்தைத் தொடங்கிய நியூஸிலாந்து அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 366 ஓட்டங்களை எடுத்தது. இதில், ஜேக்கப்ஓரம் 97, மார்க் றிச்சட்சன் 82 ஓட்டங்களை எடுத்து நியூஸிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். அத்துடன், டானியல் விற்றோரியும் தனது பங்கிற்கு 44 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பாகிஸ்தான் அணிசார்பில் சொகைப் அக்தர் 48 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை எடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட்டில்

# பலமான நிலையில் தென்னாபிரிக்க அணி

தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெறும் தென்னாபிரிக்க-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையே நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்க அணி ஆட்ட நேரமுடிவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களை எடுத்து மிகவும் பலமான நிலையில் உள்ளது.

முன்னதாக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 57 ஓட்டங்களுடன் நேற்றைய ஆட்டத்தைத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 264 ஓட்டங்களை மட்டும் எடுத்தது.

இதில், தனது நூறாவது டெஸ்ட் போட்டியில் ஆடிய மேற்கிந்திய அணித் தலைவர் லாரா 72, ட்ராகெஸ் 67, ஜக்கோப்ஸ் 58 ஓட்டங்களை எடுத்தனர்.

பின்னர் ஆடிய தென்னாபிரிக்க அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களை எடுத்தது. இதில் கிப்ஸ் 142, கலிஸ் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.



தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் நிற்னி 66 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டையும், நெல் 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், பொலக் 59 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் எடுத்துள்ளனர்.


## சிறுவிளம்பரம்

**தட்டச்சு வகுப்புக்கள்**

தமிழ், ஆங்கில தட்டெழுத்து வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம் 31-12-2003 புதன்கிழமை.

தொடர்பு:- N.S.T.C.A,8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (570)

**நீம் சுகாதார தூபம்**

எமது விற்பனை வாகனத்திலும், தொழிலகத்திலும் நீம் சுகாதார தூபம் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்,
த.பெ.இல 77,
யாழ்ப்பாணம்.

(சி-1872)

**விற்பனைக்கு**

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

TELESONIC, RIKON, PACIFIC, USHA AND SUNDA வகையில் Fans, Toasters, Irons, Gas Cookers, Washing Machines, Food Jars, Blenders, Clocks, Rice Cookers, Televisions, Ceiling Fans, Mega Vacuum flasks இன்னும் பலதரப்பட்ட உபகரணங்களும் உண்டு.

IZZY E NTERPRISES
164/1, Prince Street, Colombo - 11
T.P:- 2437843 Fax:- 075-354304

(சி-1960)




வலி. வடக்குப் பிரதேச செயலகத்தில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முதியோருக்கு உடுபுடைவை வழங்கும் வைபத்தில் அமைச்சின் உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம் உடுபுடைவை வழங்குகின்றார். அருகில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா காணப்படுகின்றார்.



மகாவித்துவான் வீரமணி ஐயர் நினைவாக நேற்று முன்தினம் நல்லை ஆதீன மண்டபத்தில் நடந்த இசை நிகழ்ச்சியில் லண்டன் கலைஞர் சிவசக்தி சிவனேசனின் பாட்டு இடம்பெறுவதை படத்தில் காணலாம்.

# நாவலர் கலாசார மண்டபத்திற்கருகில் மீன் வியாபாரத்தால் சுகாதார சீர்கேடு

மக்கள் நடமாடும் பகுதியில் வைத்து மீன்வியாபாரம் செய்வதால் சுகாதாரத்திற்கு பெரும் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திற்கு அருகிலுள்ள ஒழுங்கையொன்றில் வைத்து சில வியாபாரிகள் மீன்வியாபாரம் செய்துவருகின்றனர்.

மீன்களை வெட்டி விற்பனை செய்யும்போது, கழிவுகளை அந்த வீதிப் பகுதியிலேயே கொட்டிவிடுவதனால், பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளது. காகம், நாய் போன்றவை இந்தக் கழிவுகளைக் கிளறுவதால் துர்நாற்றமும், சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுவதாகப் பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாநகர சபையினர் - மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை தாம் எடுத்துவருவதாக மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)


**ராஜா** யாழ்ப்பாணம்.
இன்று முதல் சேரன், ரதி, மணிவண்ணன் நடித்த
**சொல்ல மறந்த கதை**
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-1847)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
எம்.ஜி.ஆர். நினைவு தினத்தையொட்டி எம்.ஜி.ஆர் (இருவேடம்), ஜெயலலிதா நடித்த
**குடியிருந்த கோயில்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
JOHNNY ENGLISH
(சி-1846)


# சிற்றூர்திகளை கண்காணிக்க அவதானிப்பாளர்கள் நியமனம்

முந்திச் செல்லும் மினிபஸ்களை அவதானிப்பதற்காக பருத்தித்துறை வீதியில் அவதானிப்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

கல்வியங்காட்டுப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற விபத்துச்சம்பவத்தை அடுத்து அச்சுவேலி, பருத்தித்துறை பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்களை அவதானிப்பதற்கு விசேட ஊழியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, ஏனைய பிரதான வீதிகளிலும் அவதானிப்பாளர்களை நிறுத்துவதன் மூலமாக, அநியாயமான வீதி விபத்துக்களை தவிர்க்கமுடியும் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ந)


**O/L... இன் பின் அடுத்தது என்ன?**

விடுமுறையை வீணாக கழிக்காதீர்
சரளமான ஆங்கில அறிவுடன் Diploma சான்றிதழ் ஒன்றும்

இலவச தபால் மூலம் ஆங்கில பாடநெறியை தொடருங்கள்

**இலவசம் பின்வருவன இலவசம்**



அழகிய டீ.சேர்ட் ஒன்றுடன்
2004ம் ஆண்டுக்கான (Diary) தினக்குறிப்பேடு
ஒன்று அடையாள அட்டை (Identity Card)

Diary



(569)

பாடநெறியில் இணையும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 4/50 பெறுமதியான 3 முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

The ENGLISH LANGUAGE INSTITUTE
P.O.BOX 083 Kandy
Tel: 0777-802849

# பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றும் நிலைமையில் எந்த மாற்றமும் இல்லை!

## ஜனாதிபதியைச் சாடுகிறார் பீரிஸ்



(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனக்கூறி ஐக்கிய தேசிய முன்னணி அரசிடமிருந்து - பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றபோதும், நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய பீரிஸ் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நாட்டினைப் பாதுகாப்பதற்குத்தான் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதாகக்கூறும் ஜனாதிபதி, தற்போது பாதுகாப்புத் தொடர்பில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. இதன்மூலம் ஜனாதிபதியின் செயற்பாடு வெறும் அரசியல் நோக்கம் கருதியது என்பது அனைவருக்கும் தெளிவாகியுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்ற பின்னர் சுமார் 210 மில்லியன் டொலர் முதலீடு கிடைக்காமற்போயுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஈழத்தமிழர்களுக்காக குரல்கொடுக்குமாறு
# தி.மு.க தலைவர் கருணாநிதியிடம் அமைச்சர் மகேஸ்வரன் கோரிக்கை

ஈழத் தமிழர்களுக்காக கலைஞர் கருணாநிதி தலைமையிலான கட்சி குரல்கொடுக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக்கழகத் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான கருணாநிதியிடம் இந்தியா சென்ற அமைச்சர் மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு கருணாநிதியை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து இலங்கை விடயங்கள் தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலில் தி.மு.க செயலாளர் அன்பழகன், தமிழக சட்டசபை உறுப்பினர்களான ஆற்காடு வீராசாமி, நெப்போலியன், நாடாளுமன்ற உறுப்பினரும், நடிகருமான சரத்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒரு மணித்தியாலத்திற்கு மேல் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில்போது, கருணாநிதி - ஈழத்தமிழர்களின் தற்போதைய நிலைகுறித்தும், சமாதான முயற்சிகள் குறித்தும் அமைச்சர் மகேஸ்வரனிடம் கேட்டறிந்தார்.

இந்தியா தம்மைக் கைவிட்டுவிட்டதாக ஈழத்தமிழர்கள் எண்ணிக்கொள்ளவதாகவும், எனவே இந்தியா மீண்டும் ஈழத்தமிழர்கள் தொடர்பாக கவனம்செலுத்தவேண்டும் என்றும் அமைச்சர் மகேஸ்வரன் கருணாநிதியிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

தானும், தனது கட்சியும் இதுதொடர்பாக கவனம் செலுத்துவதாக கருணாநிதி உறுதி அளித்தார்.

இந்தியா சென்ற அமைச்சர் மகேஸ்வரன் அங்கு காஞ்சிப் பெரியார் உட்படப் பல மதத் தலைவர்களையும் சந்தித்துப்பேசியுள்ளார். (ச)

# ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவையில் சகல கட்சிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்

## கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவை மூலமாக அனைத்துக் கட்சிகளும் தமது கொள்கைகளை கூறுவதற்கு வழிசெய்து தரப்படுமென, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவரும், ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடு முழுவதிலுமுள்ள ரூபவாஹினி சேவையின் செய்தியாளர்களை, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதன்போது அரசியல் வன்முறைகள் இடம்பெறலாம் என பல தரப்பாலும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறான சம்பவங்கள் நடைபெறும்போது அவை தொடர்பாக பக்கச்சார்பின்றி நடுநிலையான செய்திகளை வெளியிடவேண்டியது செய்தியாளர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இன்று ஊடகங்கள் ஒரு சிலரது கட்டுப்பாட்டுக்குள் கிடக்கின்றன. இந்தநிலை மாறவேண்டும். அதற்காகச் செய்தியாளர்கள் உழைக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது, ரூபவாஹினி கூட்டுத்தாபனப் பணிப்பாளர் வசந்த பெர்னாண்டோ, பிரதிப் பணிப்பணிப்பாளர் அஞ்சலி செனிவிரட்ண, செய்திப் பணிப்பாளர்கள் ரி.எம்.ரி. சந்திரசேகரா, சுனில் சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

# தமிழ்மொழிமூல ஆசிரியர் போட்டிப் பரீட்சையை அந்தந்த மாவட்டங்களிலேயே நடத்தவும்

## கல்வி அமைச்சுக்கு ஆனந்தசங்கரி கடிதம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழிமூல ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை அந்தந்த இடங்களில் நடத்தவேண்டும் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி கல்வி அமைச்சுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

பரீட்சையை கொழும்பில் நடத்துவது நியாயமற்ற செயல் எனவும் அந்தக் கடிதத்தில் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ளவர்கள் எல்லோரும் கொழும்புக்கு வரமுடியாத நிலை உள்ளது. கொழும்புக்கு வருகின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்குவதற்குரிய வசதிகள் இருக்காததுடன், பயணச் செலவுகள் அதிகமாக இருக்கும்.

வடக்கு - கிழக்கு இளைஞர்களை கொழும்புக்கு அனுமதிப்பதில் தற்போதும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உள்ளன. அத்துடன், வடக்கு-கிழக்கு இளைஞர்களிடம் கொழும்பில் உள்ளவர்களுக்கு இன்னமும் சரியான நம்பிக்கை ஏற்படவில்லை எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மாவட்ட அடிப்படையிலோ அல்லது வடக்குக்கு ஒன்று கிழக்குக்கு ஒன்று என்ற அடிப்படையிலோ பரீட்சை நிலையத்தை அமைக்கவேண்டும் என்றும் கல்வி அமைச்சை ஆனந்தசங்கரி கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு பரீட்சார்த்திகளின் நன்மை கருதி இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளரை ஆனந்தசங்கரி கேட்டுள்ளார்.

# முஸ்லிம் சமாதானப் பிரிவை நியமிக்க ஐ.தே.மு அமைச்சரவை அங்கீகாரம்!

(கொழும்பு)

முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரசசினைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், அவற்றைத் தீர்ப்பதற்குமான சிபார்சுகளை முன்வைப்பதற்காக முஸ்லிம் சமாதான ஆலோசனைப் பிரிவொன்றை நியமிப்பதற்கு, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இது தொடர்பான பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, கடந்த புதன்கிழமை அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் கீழ் இயங்கவிருக்கும் முஸ்லிம் சமாதான ஆலோசனைப் பிரிவின் தலைவராக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் எம்.எல்.ஏ. காதர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆலோசனைப் பிரிவு சமாதான முயற்சிகளின்போது முஸ்லிம்கள் தொடர்பாக எழும் சிக்கல்களைக் கையாள்வதுடன், அதுபற்றிப் பிரதமருக்கு ஆலோசனைகளை வழங்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது முஸ்லிம்களின் நலன்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை எனக் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்தே, பிரதமர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேநீர்விருந்துக்கு வருமாறு பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு!

புதுவருடத்தினை முன்னிட்டு தேநீர் விருந்துபசாரத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், அமைச்சர்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைத்துள்ளார். எதிர்வரும் புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற பின்னர் இந்தத் தேநீர் விருந்துபசாரம் நடைபெறும் என்றும், அதில் பங்குபற்றுமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பினை பிரதமர் ஏற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 4 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு, உள்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சுகளை பொறுப்பேற்றதையடுத்து ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் அரசியல் நெருக்கடி நிலவி வருகின்றது. இந்த நிலையில் ஜனாதிபதி இந்த அழைப்பினை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் அபிவிருத்தி நிறுவனம் நடத்தும் கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையமும், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு நிறுவனமும் இணைந்து நடத்தும் - 'சமாதான செயற்பாட்டு சகவாழ்வும், பெண்களின் பங்களிப்பும்' என்ற கருத்தரங்கு இன்று காலை காலை 9.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், பெண்கள் மனித உரிமைகள் இணைப்பாளர் மாலினி திசாநாயக்க, யாழ் மாவட்ட இணைப்பாளர் பா.நிர்மானுஷன் ஆகியோர் உரையாற்றுவர்

# துறைமுகங்களை ஆழப்படுத்த இலங்கைக்கு புதிய கப்பல்!

துறைமுகங்களையும், ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் இடங்களையும் தோண்டி ஆழப்படுத்துவதற்காக புதிய கப்பலொன்றை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை பெற்றுள்ளது.

துறைமுக அபிவிருத்தி கப்பல் துறை அமைச்சினால் - துறைமுக அதிகாரசபையிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ள இந்தக் கப்பலுக்கு பியஹொவ்டா எனப் பெயரிடப்பட்டுள்ளது.

473 மில்லியன் ரூபா பெறுமதியான இந்தக் கப்பல் மூலம் கொழும்புத்துறைமுகத்தை சூழவுள்ள சேற்றையும், மணலையும் அகற்றும் நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொள்ளமுடியும் என்று, துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிக்கிறது. இந்தக் கப்பலைக் கொள்வனவு செய்த பெறுமதியில் 25 வீதத்தினை நெதர்லாந்து அரசு வழங்கியுள்ளது.

ஏனைய துறைமுகங்களுடன் ஒப்பிடுகையில் - கொழும்புத்துறைமுகமும், ஆறுகள் சங்கமிக்கும் இடங்களும் சேறும், மணலும் அதிகமாக உள்ளதால் துறைமுகத்தின் ஆழம் குறைந்துவருவதாகவும், இதனால் கப்பல் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேரரின் இறுதிக்கிரியையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து
# பொலிஸாரின் அறிக்கை நேற்று பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிப்பு

சோமதேரரின் இறுதிக் கிரியைகளின்போது, பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தியது தொடர்பான அறிக்கை - நேற்று பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த 24 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற சோம தேரரின் இறுதிக்கிரியைகளின்போது, ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தடுப்பதற்காகப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகம் செய்திருந்தனர்.

இதனைக் கண்டித்து பல தரப்புகளிடம் இருந்தும் கண்டனங்கள் எழுந்துள்ளமையால், பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி அறிக்கையொன்றை நேற்று பொலிஸ்மா அதிபரிடம் கையளித்தனர்.

சோமதேரரின் இறுதிக்கிரியைகளின்போது, தேரரை இழிவுபடுத்தும் விதத்திலான துண்டுப்பிரசுரங்களை சிலர் விநியோகித்ததாகவும் - அவர்களைப் பொதுமக்கள் தாக்கிய போது, அதனைத் தடுப்பதற்காகவே பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஐந்து பேரை பொலிஸார் தடுத்துவைத்து விசாரணை செய்துவந்தனர். விசாரணைகளின்போது, அவர்கள் வேறு நபர்கள் விநியோகித்த துண்டுப் பிரசுரங்களையே வைத்திருந்ததாகவும், அவற்றில் தேரரை இழிவுபடுத்தும் வகையில் எதுவும் காணப்படவிலலையெனவும் தெரியவந்துள்ளது.

அதேவேளை - தேரரின் இறுதிக் கிரியை நிகழ்வுகளின்போது, சிவில் உடையில் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தோரும், தேரரை இழிவுபடுத்தும் விதத்திலான எந்தவித துண்டுப்பிரசுரங்களும் இறுதிக் கிரியைகளின்போது, விநியோகிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவில் சுமுகத்தீர்வு காணப்படும்!

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவிப்பு

(சென்னை)

கச்சதீவில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து இந்திய அரசிடம் பேசிவருவதாகவும், விரைவில் இந்தப் பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு காணப்படும் என்று, தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் வேலூர் சென்ற அவர் அங்கு கட்டப்பட்டுள்ள இலங்கையை ஆண்ட கடைசி மன்னன் விஜயசிம்மன் நினைவு மணிமண்டபத்தையும் பார்வையிட்டார்.

அங்கு செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்,

தமிழக மீன்வர்கள் கச்சதீவில் மீன்பிடிப்பது தொடர்பாகவும், இலங்கைக் கடற்படையினரால் கடத்தப்படுவது குறித்தும் - இலங்கை, இந்திய அரசுகள் பேசிவருகின்றன. மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளைத் திரும்ப அழைப்பது போல், இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, நோர்வே உட்பட பிறநாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்களையும் மீண்டும் திருப்பியழைப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில், கிரீஸ் காசரவல்லியின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'கிரவ்ய' (கதை சொல்லியின் கதை) என்ற கன்னடத் திரைப்படம் ஆங்கிலத் துணைத்தலைப்புக்களுடன், இன்று காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

படக்காட்சியின் இறுதியில், எழுத்தாளர் யேசுராஜா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின்கீழ் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

### காரைநகரில் உதவித்திட்டங்கள்

(காரைநகர்)

நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன், காரைநகரில் மலசல கூடம், முன்பள்ளி, பொதுநோக்கு மண்டபம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

காரைநகர் தோப்புக்காடு என்னும் இடத்தில், மக்களின் நலன் கருதி, 30 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - காரைநகர் பாலாவோடைப் பகுதியில், முன்பள்ளி, பொதுநோக்கு மண்டபம் என்பன அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு நிக்கொட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள இவை அனைத்தும், அடுத்தமாதம் இந்து கலாசார அமைச்சினால், மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படவுள்ளன. இவை மக்களின் பல அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில், நிக்கொட் நிறுவனத்தால், மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ப)

### தண்ணீர் என நினைத்து ரின்னரைக் குடித்த சிறுவன்

(யாழ்ப்பாணம்)

சோடாப்போத்தலில் இருந்த ரின்னரை தண்ணீர் என நினைத்து குடித்த சிறுவன் ஒருவன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாா. இந்தச் சம்பவம், திருநெல்வேலியிலுள்ள கடை ஒன்றுக்குத் திருத்தவேலைக்காக வர்ணப்பூச்சு இடம்பெற்றுக்கொண்டிருந்த இடத்தில் நின்ற எஸ். கேதீஸ்வரன் (வயது-8) என்ற சிறுவன் - சோடா போத்தலில் இருந்த ரின்னரை தண்ணீர் என நினைத்து அருந்தினான். அருகில் நின்றவர்களால் இந்தச் சிறுவன் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். (205)

### மஹாகணபதி ஹோமம்

சாவகச்சேரி கல்வயல் வேதவன விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றுவரும், விநாயகவிரத இலட்சார்ச்சனை விழாவின் இறுதிநாளான இன்று மாலை 'மஹா கணபதி ஹோமம்' இடம்பெறவுள்ளது. மேற்படி ஹோமத்தை சிவஸ்ரீ முரளிதரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சார்ய குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர். (24)

### திருவெம்பாவை பூஜைகள் ஆரம்பம்

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு, ஸ்ரீ நாகவரத நாராயண தேவஸ்தானத்தில், இன்று தொடக்கம் தொடர்ந்து 11 தினங்கள் திருவெம்பாவை பூஜைகள் நடைபெறவிருக்கின்றன. அதேவேளை - நாளை விநாயக சஷ்டி பூஜையும் நடைபெறவுள்ளது. (206)

### எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்களுக்கான எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று, விடுதலைப் புலிகளின் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியினரால், நடத்தப்படவுள்ளது.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்தக் கருத்தரங்கில் தவறாமல் நிலையங்களை 1.30 மணிக்கு மூடி, கலந்துகொணடு, சுகாதார விதிமுறைகளை அறிந்து செயற்படுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (206)

### சஞ்சிகைகள் ஏல விற்பனை

சுன்னாகம் பிரதேச சபையினால், 2002/2003 ஆம் ஆண்டுக்கான பழைய சஞ்சிகைகள் நாளை மறுதினம் காலை 10.30 மணிக்கு ஏலத்தில் விடப்படவுள்ளது. இது பற்றி அறிய விரும்புவோர், சுன்னாகம் பிரதேச சபையின் நூல் நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (72)

### வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

தென் பகுதியிலிருந்து, பொருட்களைக் கொண்டுவரும் சகல வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதித்துறையின் ஆயப்பகுதியினருக்குமான அவசர கலந்துரையாடல், நாளை காலை 10 மணிக்கு யாழ். வணிகர் கழகத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில், பொருட்களைத் தென்பகுதியிலிருந்து கொண்டுவரும் சகல வர்த்தகர்களும், தென்பகுதியிலிருந்து லொறிகளில் ஏற்றி இறக்கும் முகவர்களும், தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மின்சார வேலைகளுக்கு

# ஆசிய அபிவிருத்தி வங்கி 6 மில்லியன் ரூபா கடன் உதவி

(யாழ்ப்பாணம்)

கடனடிப்படையில் யாழ்ப் பாணம் - வன்னிப் பகுதிகளுக்கான மின்சார வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கென 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை, ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை மின்சாரசபையின் வடமாகாண அலுவலகத்திற்கு வழங்கமுன்வந்துள்ளது.

அடுத்த ஆண்டுக்கான மின்சார வேலைத்திட்டத்திற்கு, இந்தக் கடன் தொகை வழங்கப்படவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் மின் இணைப்புக்கள் வழங்கப்படாத இடங்களுக்கு, மின் இணைப்புக்களை வழங்கவும், திருத்தவேலைகளை மேற்கொள்வதற்கெனவும் இரண்டு மில்லியன் ரூபாய்களும் -

வன்னியின் - கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மின்பிறப்பாக்கிமூலம் மின் வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு, 4 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வழங்கப்படவுள்ளன.

வன்னியின் பலபகுதிகளிலும் மின் இணைப்பு வழங்குவதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் நிறைய இருப்பதால், மேலும் நிதி ஒதுக்கீடு தேவைப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மின் இணைபபு வேலைகள்,. அடுத்த ஆண்டு பெப்ரவரிமாதம் முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# லான்ட் மாஸ்டர் பதிவுக்கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது

## மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர்

லானட்மாஸ்ரர் வாகனப்பதிவினை மேற்கொண்டோர்- அனுமதிப்பத்திரம் பெறவரும்போது, மேலதிகமாக 650 ரூபா செலுத்தவேண்டுமென, யாழ். மோட்டார் திணைக்கள ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த ஒக்ரோபர் மாதம் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையின்போது, லான்ட் மாஸ்டர் வாகனத்திற்கான பதிவினை மேற்கொண்டவர்களது 35 பதிவுகள் நேற்றுமுதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு பதிவினை மேற்கொண்டவர்கள், இவ் வாகனத்திற்குரிய பதிவுக்கட்டணமாக, மேலும் 650 ரூபா செலுத்தவேண்டியிருப்பதால், அவர்கள் அந்தத் தொகையினை செலுத்தல் வேண்டும்.

அதேவேளை, 170 மேட்டார் சைக்கிள்களுக்குரிய பதிவுகளும், எடுத்துவரப்பட்டுள்ளன. அவற்றை, மேலதிக பதிவுக்கட்டணங்கள் எதுவுமின்றி பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தச் சான்றுகளையும், யாழ். செயலகத்தில் தேங்கிக்கிடக்கும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் வானப்பதிவுகளையும் கடமை நாட்களில், பிற்பகல் 2 மணிமுதல் 4 மணி வரையிலான நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

### துடுப்பாட்டப்போட்டி

புதுவருடத்தைமுன்னிட்டு யாழ். றோட்டறிக் கழகம் - தனது சகோதர கழகங்களுக்கிடையில் துடுப்பாட்டப் போட்டி ஒன்றை இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை உயர் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்படவுள்ளது. இதில் சுன்னாகம், மானிப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய றோட்டறிக் கழகங்கள் பங்கு கொள்கின்றன. (72)

# கசிப்பு உற்பத்தியாளர்களால் கிராம சேவகர் தாக்கப்பட்டார்

வவுனியா மாவட்டதிலுள்ள மகாறம்பைக்குளம் பகுதியில், கசிப்பு உற்பத்தியை நிறுத்துமாறு கூறிய அந்தப் பகுதி கிராம சேவையாளர், கசிப்பு உற்பத்தியாளர்களால் பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மகாறம்பைக்குளம் பகுதியில் பெருமளவில் கசிப்பு உற்பத்திசெய்யப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் கொடுத்த புகாரையடுத்து, அந்தப் பகுதிக்குரிய கிராமசேவையாளர் கசிப்பு உற்பத்தி செய்யும் பகுதிக்குச் சென்று கசிப்பு உற்பத்தியை நிறுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கூறியபோது, அவர்கள் கிராமசேவையாளரை கடுமையாகத் தாக்கி கடுமையாகத் தாக்கப்பட்ட கிராம சேவகர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்வாறு கிராம சேவையாளரைத் தாக்கிய நபர்களை வவுனியா பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (03)

## விண்ணப்பப்படிவ விற்பனைக்கும்

# இந்து கலாசார அமைச்சிற்கும் எதுவித தொடர்புமில்லையாம்

இந்து கலாசார அமைச்சின் பெயரைப் பயன்படுத்தி, விற்பனை செய்யப்படும் விண்ணப்பப் படிவங்களுக்கும், தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென இந்து கலாசார அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்து கலாசார அமைச்சின் பெயரைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்படும் - வீட்டுத்திட்டம், வீடு புனரமைத்தல் மற்றும் ஆலய புனரமைப்பு சம்பந்தமான விண்ணப்பப்படிவங்களுக்கும் தமக்கும் எந்த வித தொடர்பும் இல்லை. இவ்வாறு விற்பனை செய்யப்படும் விண்ணப்பப்படிவங்கள் உள்ள நிறுவனங்கள், கடைகளின் பெயர் விபரங்களை உடன் இந்து கலாசார அமைச்சுக்கு அறிவிக்குமாறு, மக்களிடம் இந்து சமய அலுவலர்கள் அமைச்சின் யாழ். பிராந்திய ஊடகப் பிரிவு கேட்டுள்ளது.



வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க்ங்களின் கொத்தணி அங்கத்துவ சங்கங்களின் ஆதரவுடன் நடைபெறுகின்ற முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர், ஆசிரியர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல் நிகழ்வின்போது- தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்.மாவட்டத் திட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# விசர்நாய் கடிக்கு தடுப்பூசி கிளிநொச்சியில் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

விசர்நாய்க்கடிக்கு ஏற்றும் தடுப்பூசிக்கு - கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால், விசர் நாய் கடிக்குஉள்ளாவோரை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்க வேண்டியுள்ளதாகவும், அந்த வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த காலங்களில் நடைபெற்ற போரின்போது, வன்னிப் பகுதியில் மருந்துவப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. ஆனால், தற்போது, சமாதானத் காலத்திலும், மருத்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவது குறித்து, பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர் (01).

# மேசைப் பந்தாட்டப்போட்டியில் பெண்கள் அணி முன்னணியில்

கிழக்கு மாகாண மேசைப் பந்தாட்ட திறந்த போட்டி - திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

இந்தப் போட்டியில் - யாழ்.மாவட்ட வீராங்கனை ரி.பானுரேகா ஒற்றையர், இரட்டையர், கலப்பிரட்டையர் போட்டியில், சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச்சென்றார்.

திறந்த போட்டிகளில், ஆண்கள் ஒற்றையர் போட்டியின் இறுதிப் போட்டியில் விளையாடிய - இ.சுகந்தன் கடும்போட்டியின்பின்பு, தோல்வி அடைந்து, இரண்டாம் இடத்தினைப் பெற்றார். பெண்கள் ஒற்றையர் போட்டியில் - ரி.பானுரேகா சம்பியனாகவும், ஆண்கள் இரட்டையர் போட்டியில் - யாழ். மாவட்ட வீரர்கள் கடும் போட்டியின் பின்பு தோல்வியுற்றனர். எனினும், பெண்கள் இரட்டையர் போட்டியில் - ரி.பானுரேகா, எஸ்.சுகந்தி அணியின் சம்பியனாகவும் தெரிவாகினர்.

இந்தப் போட்டிகளின், இறுதிப் பரிசளிப்பு இன்றுமாலை 7 மணிக்கு திருமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (205)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : ம.சுர்த்திகா (ஸ்ருதி)
முகவரி : நாவற்காடு, வரணி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




# அவமானப்படும் கனவான்கள்

முன்பு பலதடவைகள் ஆட்ட மத்தியஸ்தர்களின் நடுநிலைமை சார்ந்த கடும்போக்குப் பற்றிய செயல்தான் வந்திருந்தன. குறிப்பாக மைக்டிரொக்ரர், றஞ்சன்மடுகல் போன்றோர் தொடர்பில் பலசெய்திகள் வந்திருந்தன. ஆனால் இலங்கை, இங்கிலாந்து நாடுகளுக்குகிடையில் தற்போது நடைபெற்ற டெஸ்ட்தொடரில் ஏற்பட்ட சர்ச்சைகள் தொடர்பில், ஆட்டமத்தியஸ்தர் கிளைவ் லொயிட் தொடர்பான செய்திகள் அவ்வளவு உற்சாகம் தருவதாக இல்லை.



மிதப்பு நல்லதுக்கல்ல
நஸார் உசேன்

இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது, இங்கிலாந்து வீரர் நஸார் உசேன் - இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன்மீது, வார்த்தைக் கணைகள் வீசியதன்மூலம் சர்ச்சைக்குள்ளாகியிருந்தார். இதன் அடுத்த கட்டம், ஆட்டமத்தியஸ்தரின் விசாரணைக்கு உட்படுவதுதான். ஆனால், வரும் செய்திகளின்படி ஆட்டமத்தியஸ்தர் கிளைவ் லொயிட் மீது, நஸார் உசேன் மிரட்டல் பாணியில் நடந்து கொண்டுள்ளதுடன், எதுவித தண்டனைக்கும் உள்ளாகாதும் தப்பியிருக்கிறார். ICC யின் ஒழுக்கக்கோவையின்படி ஒரு அணியின் வீரர் மீது மேற்கொள்ளப்படும் விசாரணையின்போது, அந்த அணியின் முகாமையாளர், மற்றும் அணித்தலைவர் சமுகமளித்திருக்க வேண்டும். இங்கும் ஏமாற்றம் அந்த விளக்கத்துக்கு இங்கிலாந்தின் அணித்தலைவர் மைக்கல் வோண் சமுகமளிக்காமல் விடக்கூடிய துணிவும் பெற்றிருந்தார். இதேவேளை, தன்னை குற்றமிழைத்தவர் என்று நிறுவமுயன்றால் சட்ட நடவடிக்கை அளவில் அந்த விடயம் போகும் என்று, நஸார் உசேன் கிளைவ் லொயிட்டை மிரட்டியிருக்கிறார். ஆனால் நஸாரின் வார்த்தைகள், உரையாடியபாணி என்பவற்றால் அதிர்ச்சியடைந்தவராகக் காணப்பட்ட லொயிட்- அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் துணிவற்று, பேசாமடந்தையாக இருந்திருக்கிறார் என்பது மிகக்கசப்பான செய்தி. இந்த வார்த்தையாடலுக்காகவே, உசேன் மீது ஒரு சில ஆட்டங்கள் மீதுதடை அல்லது வருமானத்தின் ஒரு பகுதி Fine என்றவாறு நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனால், அதைச்செய்யும் துணிவும் லொயிட்டுக்கு இருக்கவில்லை என்பது, இன்னும் பரிதாபம். இந்த அவமான கரமான போக்குப் பற்றி கிரிக்கெட் நேர்முக வர்ணணையாளர் ரோனி கிரெய்க் கருத்துக் கூறும்போது, இதே குற்றச்சாட்டுக்களுக்கு ஹசான் திலகரட்ண ஆளாகி, லொயிட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்தால், லொயிட்டின் நடவடிக்கை எவ்வாறு அமைந்திருக்கும் என்று அறிவது ஆர்வத்துக்குரிய விடயம்தான் என்று சாகசமாகக் குறிப்பிட்டுள்ளார்.



பதவிக்கு ஆசை
கிளைவ் லொயிட்

விமர்சகர்கள் கருத்துக்கூறும்போது, முரளியின் புகழும், திறமையும் கொண்ட காழ்ப்புணர்சியும், தனது இறங்குமுக கிரிக்கெட் நிலையும் - உசேனின் நிலைமாறும் குணத்திற்கு காரணமாக இருக்கக்கூடும் என்றார்கள். சிறப்பாக நஸாரின் துடுப்பாட்டச் சராசரி, முரளியின் துடுப்பாட்டச் சராசரியைவிட குறைவு என்கிறார்கள். மேலும், முரளி முதல் இனிங்ஸில் சர்ச்சைக்குரிய முறையில் அவுட்டாக்கியது தொடர்பில் மைக்கல்வோன் மைதான நடுவர்களிடம் - TV Replay யைப் பார்க்கும்படி வற்புறுத்தினாராம். இதுவும் சட்டத்துக்குப் புறம்பான அதிக திமிர்கொண்ட செயலாகக் கருதப்படுகிறது.

இவையெல்லாம் விமர்சகர்களால் நன்கு அவதானிக்கப்பட்டுள்ளன. அதிலும், பொதுவாக இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் அத்துமீறும் செயல்களில் ஈடுபடும்போது, அவை கண்டுகொள்ளப்படாமலே விடப்படுகின்றன அல்லது சுட்டிக்காட்டும் தைரியம் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இங்கே கிளைவ் லொயிட்டுக்கு நடந்ததும் இதுதான்போலத் தெரிகின்றது.

இந்தப் போக்குக்கு இன்னொரு காரணம் - தட்டிக்கேட்டால் பதவிகள் பறிபோகும், அதோடு வருமானமும் சேர்ந்து போய்விடும் என்ற அச்சமும் காரணம் என்று விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். எனவே, ICC யின் ஒழுக்கக்கோவையை சரியாகக் கடைப்பிடியுங்கள். அவ்வாறின்றேல் ICC யின் மதிப்பைக் கெடுக்காதீர்கள் அல்லது கௌரவமாக விலகிவிடுங்கள் என்கிறார்கள் விமர்சகர்கள். இந்தக் கருத்தில் பிழையில்லை போலத் தெரிவதுடன், இப்படியே காலங்காலமாக எதிர்காலத்திலும் கூறிக்கொண்டிருக்கவேண்டிய நிலை ஏற்படுமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. இறுதியில் ஒரு ஆறுதல் - இலங்கை அணி மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து பலகாலம் தலைநிமிர்த்த முடியாதபடி, படுமோசமாகத் தாக்கி, நிலத்தில் சரித்துவிட்டிருக்கிறது. தமது துடுப்பாட்டப் பந்து வீச்சுத் திறமையால் மட்டும் இந்த அடி நஸார் உசேனுக் கும், இங்கிலாந்து அணி வீரர்களுக்கும் தலையில் கோடை இடி இறங்கியதுபோல் இருந்திருக்கும். அதுபோதும்.

- ஜோசப் கிருஸ்ணா

# காணிநிலம் வேண்டும் பராசக்தி

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் உபதலைவர் யூசுப் யுகானா தனது கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை நியூசிலாந்தில் கொண்டாடுகிறார். தனது அணியின் ஏனைய வீரர்கள் அனைவரும் இஸ்லாமியர்கள். ஆனால், அவர்கள் தனது கொண்டாட்டங்களுக்கும், நம்பிக்கைக்கும் முழுக்கௌரவம் தருகிறார்கள் என்கிறார் யுகானா. வழக்கமாக தனது அணிவீரர்களை கிறிஸ்மஸ்காட் அனுப்பி வாழ்த்துவார்கள் என்றும் கூறுகிறார். கடந்த வருடம் அணி வீரர்களுடன் இந்நாளில் இருந்தபோது, ரசீட் லதீப் தனக்கு மதிய உணவு அளித்து மகிழ்ந்தார் என்கிறார். அடேயப்பா!. இஸ்லாமிய நாடொன்றில் ஒரு கத்தோலிக்கர் உதவித்தலைவரா என்று வியப்பாக இருந்தது.



மார்க்கம் சாரியானது
அஸாருதீன்



திறமை மட்டும் தெரிந்தது
ஜோசெப் ஜகானா

இஸ்லாமிய தீவிரவாதம் - அதீத மத முனைப்பு என்றெல்லாம் பேசினாலும் இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில் ஒரு கத்தோலிக்கரை உபதலைவராக ஏற்றுக்கொள்ளும் உயர்ந்த உள்ளம் கொண்டவர்களாக இருக்கும் பாகிஸ்தான் மக்கள் - மற்றும் ஆட்சியாளர்கள் மீது ஒருவகை மதிப்பு ஏற்படுத்துவதை தவிர்க்க முடியவில்லை.

இது இப்படியென்றால், மறுபுறம் இங்கிலாந்துகிரிக்கெட் அணிபற்றியும் எண்ணத்தோன்றுகிறது. சூரியன் மறையாத சாம்ராஜ்யத்தை வைத்திருப்பவர்கள் பிரித்தானியர். ஆனால், சென்னையில் பிறந்து, இங்கிலாந்தை தாயகமாகக் கொண்ட நஸார் உசேன் எனும் இஸ்லாமியரை அணித்தலைவராக்க இங்கிலாந்து பின்னிற்கவில்லை என்பது மட்டுமல்ல, நஸாரின் திறமை வாய்ந்த வேறெதுவும் இங்கிலாந்தின் கிரிகெட் தெரிவாளர்களுக்குக் கண்ணுக்குத்தெரியவில்லை என்பது மட்டுமல்ல, இங்கிலாந்து மக்களும் அதேபார்வையைக் கொண்டிருக்கிறார்கள். ஒரேவேளையில் நஸார் தவிர்ந்த இன்னும் இரண்டு இஸ்லாமியர்கள்- இங்கிலாந்து அணியிலிருந்ததும் அண்மைக்கால வரலாறுதான்.



மதம் தெரியவில்லை
நஸார் உசேன்

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் காஷ்மீர் பிரச்சினையென்பது, வெறுமனே அரசியல் பிரச்சினை என்பதைவிட, அதன் மீது மதம் என்பதும் ஒன்று என்பதை பூசிமெழுகி விடமுடியாது. ஆனால், இஸ்லாமியரான அஸாருதீன் கணிசமானகாலம் இந்தியக் கிரிக்கெட் அணித்தலைவராக இருந்ததை யாரும் எப்போதும் குறைகண்டதில்லை. பாகிஸ்தான் அணி இந்தியா வந்தால், மைதானத்தை பாழ்படுத்துவோம் என்று இந்திய ரசிகர்கள் கூக்குரல் இடுவது உண்டுதான். ஆனால், அஸார் அப்படி என்றும் அவமதிக்கப்பட்டதில்லை.

ஏன் சிம்பாப்வே தென்ஆபிரிக்க அணிகளின் அண்மைக்காலங்களில் கறுப்பின வீரர்கள் வருகை அதிகரித்திருந்தாலும், வெள்ளையின வீரர்கள் அணியில் இருப்பதற்கு ஆட்சேபனைகள் பெரிதாக இல்லை. இதிலெல்லாம் இன்றைய குழப்பமான உலக அரசியல் நிலமைகளின் பின்னணியில் பார்க்கும்போது, மேற்படி விடயங்கள் அதுவும் கிரிக்கெட் ஆட்டத்தின் ஊடாகத் தெரியும்போது, மிகுந்த மனமகிழ்ச்சியாகவுள்ளது. உள்ளதைச் சொல்வதில் உள்ள மகிழ்ச்சி - உள்ளதுகளைச் சொல்வதில் கெட்டுவிடும் என்பதால், உலகின் சிறந்த சிலரைப்பற்றிச் சொல்லாமலே விடுதல் சிறப்பு.

- காயத்ரி

# தன்னை உயர்த்துபவன்

# தாழ்த்தப்படுவான்

அவுஸ்திரேலிய அணியின் மைதான நடத்தைகள் குறித்த அதிருப்திகள் அநேகம். அதனால், அவர்களின் திறமையைக்கூட மறைக்கும் வகையில் கண்டனங்கள் எழுந்ததும் உண்மை. அவுஸ்திரேலிய கிரிக்கெட் ரசிகர்கள் பற்றிய முறைப்பாடுகளும், வீரர்களுக்கு அவர்கள் குறைந்தவர்கள் அல்ல என்றவாறாக அமைந்திருப்பது துயரத்தை தருவதாக உள்ளது. இதற்கான ஆதாரங்களை அடிலெய்ட் மற்றும் பிரிஸ் பேர்ன் டெஸ்ட்போட்டித் தொடர்பில் இந்தியர்கள் எதிர்நோக்கிய அவமதிப்புக்கள் பற்றிய செய்திகள் கூறுகினறன. கிரிக்கெட் மைதானத்தில் "கூலிகள்" தின்னிப் பிடாரங்கள்" (CURRY MUNCHERS) என்று இந்திய ரசிகர்களும் இந்திய ஊடகவியலாளர்களும்கூட அவமதிக்கப்பட்டார்கள். அத்தோடு, சிறந்த பார்வையாளர் என்ற வகையில், நடைபெற்ற போட்டிகளின் மகாத்மா காந்தி போன்று வினோத உடைகளிலும் பங்கேற்றிருக்கிறார்கள் அவுஸ்திரேலிய ரசிகர்கள். மகாத்மா என்ற பெயர் எவ்வகை உணர்வு பூர்வமானது என்பதை அவர்களின் உணராமை வேதனையானது என்கிறார் ஒரு ரசிகர். இன்னொரு சம்பவம் - இங்கிலாந்து ரசிகர்கள் பார்மி ஆர்மி என்றொரு ரசிகர்படை வைத்திருப்பதுபோல, இந்தியர்கள் சிலர் சுவாமி ஆர்மி என்ற பெயரை கொண்ட ரசிகர் கூட்டமாக வந்திருக்கிறார்கள். ஆனால், இவர்கள் உள்ளூரவரால் பிளாஸ ரிக் வெற்றுக்கோப் பைகளால் மற்றும் வேறு பொருட்களால் எறியப்பட்டிருக்கிறார்கள். இதனை TV களும் படம்பிடித்துள்ளன. ஒரு இந்தியர் கருத்துக்கூறும்போது, தண்ணீர் நிறைந்த போத்தல்கள்கூட எம்மீது வீசப்படடன. இவற் றில் ஈடுபட்டவர்கள் கூடுதலான இளைஞர் களாகவே இருந்தார்கள், அதாவது எதிர்கால அவுஸ்திரேலிய பிரஜைகள் என்றார் மனவருத்தத்தோடு. அவுஸ்திரேலியாவிலே வாழ்கின்ற இந்தியர் ஒருவர் கருத்துக்கூறுகையில், இந்தியாவில் இருந்து ஆட்டங்களை ரசிக்கவந்த எனது நண்பர் மைதானத்தில் வந்து அவமானப்பட விரும்பாமையால் தான், ஆட்டத்தைப் பார்க்கவரவில்லை என்று கூறிவிட்டார். மேலும் அவர் கூறுகையில், நான் இந்தியாவின் இந்திய - அவுஸ்திரேலிய ஆட்டங்கள் பார்த்திருக்கி றேன். அங்கு இந்திய ரசிகர்கள் அவுஸ்திரேலிய வீரர்களுக்கு கொடுத்த மரியாதையும் கௌரவமும் பெரிது என்கிறார்.



ஒரு 18 வயது இளைஞன் கருத்துக்கூறுகையில், இந்திய ரசிகர்களை முஸ்லிம் என்று பட்டம் இட்டு, சதாம் உசேனை பற்றிய கிண்டல் பாட்டுக்களையும் பாடினார்கள். நாங்கள் அவுஸ்திரேலியாவில் வளர்ந்தவர்கள் இவற்றை மென்றுவிழுங்கும் பக்குவம் எங்களுக்கு வந்துவிட்டது. ஆனால், மற்றவர்கள் எவ்வளவு மனவேதனைப்பட்டார்கள் என்பதை நான் நேரிலேயே கண்டேன் என்று ஒரு ஊடகவியலாளர் - தனது ஆதங்கத்தை இவ்வாறு வெளியிட்டார். 'நான் மைதானத்தில் இருந்தபோது ஒரு எலும்புத்துண்டு என் மீது எறியப்பட்டது, தொடர்ந்து இதை எடுத்துக்கொள் என்று ஒரு குரலும் கேட்டது. அதோடு கூலி என்றும் வசைபாடப்பட்டது' என்கிறார். இந்தச் செய்திக்கட்டுரையை வெளியிட்டிருப்பது SYDNEY MORNING HERALD பத்திரிகை தனது கருத்தில், கடந்த ஒக்ரோபரில் இனவாதத்திற்கு எதிரான கொள்கைப்பிரகடனம் ICC கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது என்கிறது. அதோடு, ஒரு குரல்தரவல்ல அதிகாரி ரசிகர்களின் இத்தகைய போக்கிற்கு முடிவுகட்டப்பட வேண்டியது அவசியம் என்றும், இத்தகைய நடவடிக்கைளில் ஈடுபடுபவர்கள் மைதானத்திலிருந்து வெளியேற்றும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கூறியிருக்கிறார். விளையாட்டுக்கள் மூலம் மனித குலம் எதனைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்கு, செயற்பாடுகளும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பதுபோலத் தோன்றுகின்றது. இன்னொரு நிறத்தவரை, இன்னொர் இனத்தவரை இழிவுபடுத்த இவர்களால் எப்படி முடிகிறது என்பது - புரியாத புதிராக இருக்கிறது.

தாம் உயர்ந்தவர்கள் என்று எந்த வகையில் இவர்கள் தீர்மானித்துக்கொள்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ளமுடியாமல் இருக்கிறது. நடைபெறும் சம்பவங்களை நீண்டகாலமாக அவதானித்துவரும்போது, இவர்களின் மனதில் இனவாதம் அல்லது நிறவாதம் என்பது ஆழப் பதிந்துபோய்விட்டது என்பதையே உணரக்கூடியதாக உள்ளது. இவற்றுக்கெல்லாம் ஒரேயொருவழி - மனப்பாங்கு மாற்றம்தான். அது ஏற்படுவது எப்போது?

நிர்மலன்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

கிரிக்கெட் ஆட்டம் - இன்று உலகின் எந்தப்பாகங்களில் வாழும் மக்களும் ரசிக்கும் ஆட்டம். பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும், போட்டிகளை நடத்துவதற்கும் எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றி, முன்னிற்கின்ற ஆட்டம் என்றால், அது கிரிக்கெட்தான். உலகின் சர்வதேச வல்லரசு என தன்னைத்தானே பிரகடனம் செய்துகொண்டு, சர்வதேச பொலிஸ் காரனாக செயற்படும் அமெரிக்காகூட, கிரிக்கெட் ஆட்டத்தில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. 2007 ஆம் ஆண்டில் நடைபெறப்போகும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளில், ஒன்றையேனும் அமெரிக்க மண்ணில் நடத்துவதற்கு ஆவனசெய்து கொள்வதில், அமெரிக்கா ஆர்வம் காட்டிவருகின்றது.

இந்த நிலையில் இன்றைய நாளில் அனைவராலும் பேசப்படும் இந்த கிரிக்கெட் ஆட்டம் - இங்கிலாந்து நாட்டவர்களால் ஆரம்பிக்கப்பட்டதாக பெருமையுடன் பேசப்படுகிறது. இங்கிலாந்து நாட்டில் இந்த ஆட்டம் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினால்,

# ஒளி பெருகட்டும் ஆசியாவில்



வீரேந்தர் சேவாக்
"இந்த அடி பந்துக்கு மட்டுமல்ல"

வெள்ளைக்காரன் விளையாட்டு என்று நமது நாட்டவர்கள் அந்த விளையாட்டை அழைத்து வந்தனர். இந்த நிலைமை தற்போது மாற்றம் பெற்றிருக்கின்றது என்றுதான் கூற வேண்டும்.

இங்கிலாந்து ஆரம்பித்த இந்த விளையாட்டை, வேறு நாடுகளுக்கும் கொண்டு சென்று, 'சர்வதேச போட்டிகள்' என்றவகையில் தற்போது ஆடப்படுகின்றநிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளும், தமக்கிடையே ஆடுகின்ற டெஸ்ட் தொடர்களே அதிகம் பிரபல்யம் வாய்ந்ததாக காணப்பட்டது.

இந்த இரு அணிகளும் ஆடுகின்ற ஆட்டம் 'ஆஷஸ் கோப்பை' என்ற பெயருடன் இன்றும் ஆடப்பட்டுவருகின்றது. இங்கிலாந்தினால் இந்த ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும், அவுஸ்திரேலிய அணிதான் 'ஆஷஸ் போட்டி'த் தொடர்களில் அதிகளவில் வெற்றிவாய்ப்பைத் தனதாக்கிக் கொண்ட நாடு எனலாம்.

இங்கிலாந்துக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நடைபெறுகின்ற போட்டிகளை - அனைத்துக் கிரிக்கெட் ரசிகர்களும் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்கள். ஆசிய நாடுகளின் ஆட்டங்கள் இந்தளவு முக்கியத்துவத்துடன் எதிர்பார்க்கப் பட்டனவா என்பது கேள்வியே.

ஆனால், நிலைமை தற்போது தலைகீழாக மாறிவிட்டது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், கிரிக்கெட்டின் தாயகம் என்று கூறப்படுகின்ற ஒருநாடு - உலக வரை படத்தில் தொட்டும்கூடக் காட்டமுடியாத அளவில் உள்ள இலங்கை அணியிடம், டெஸ்ட் தொடர் ஒன்றை இழந்துள்ளது. 2003 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த கிரிக்கெட் தொடரை 1 - 0 என்ற ரீதியில் இலங்கை வென்றுள்ளது. மற்றைய இரு போட்டிகளிலும்கூட, தனக்கே வெற்றி வாய்ப்பு இருந்ததாகவும், இங்கிலாந்து அணி அந்த வெற்றிக்கனியை பறிக்கவிடாது தடைபோட்டு விட்டதாகவும், மூன்றாவது போட்டியில் விளையாடும் போது, வெற்றி பெறவேண்டும் என்ற முனைப்புடன் தாம் விளையாடியதாகவும் இலங்கை அணித்தலைவர் கூறியுள்ளார்.

இவ்வாறான ஒரு நிலைமை மறுபுறத்தில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தோன்றியுள்ளது. இந்திய அணி உலக சாம்பியன் குதிரையை அடக்கி, தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. இந்தியாவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் இடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்டில் - இந்தியா, அவுஸ்திரேலியாவை அதன் சொந்த இடத்தில் வைத்து மண்கௌவச் செய்துள்ளது.

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகள் யாரை வெற்றி கொண்ருக்கின்றார்கள் என்று பார்த்தால், அவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட அணிகள் - மிகவும் பிரபல்யம் வாய்ந்த அணிகளேயாகும். இந்த நிலையை, இவ்விரு நாடுகளும் தக்கவைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

பொதுவாகவே இலங்கை - தன்சொந்த நாட்டில் நடைபெறுகின்ற ஆட்டங்களில் வெற்றி பெறுவதாகவும், ஏனைய நாடுகளில் நடை பெறுகின்ற போட்டிகளில் தோல்வியைத் தழுவிவருகின்றமையும் சுட்டிக்காட்டி, விமர்சனங்கள் செய்பவர்கள் உண்டு. இந்த விமர்சனத்துக்கு அப்பால் சென்று, வெளிநாடுகளிலும் தனது திறமையையும், வெற்றியையும் உறுதிசெய்யவேண்டியது, இலங்கையணியின் தற்போதைய பொறுப்பு மிக்க பணியாகும்.

இந்தியா - தனது இரண்டாவது போட்டியில் வெற்றிபெற்ற மமதையோடு, விளையாடாமல் நான்கு டெஸ்ட் போட்டித்தொடரை வெல்வதற்கு உரிய உறுதியோடு விளையாட வேண்டிய கடப்பாடு அதற்கு உண்டு.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற **BIG MATCH I** ஆஷஸ் தொடரை பார்ப்பதற்கு இருக்கும் கூட்டம்போல, இலங்கை - இந்தியா நாடுகளுக்கிடையே நடைபெறுகின்ற போட்டிகளை காண்பதற்கும், ஆசிய நாடுகளின் கிரிக்கெட் கனவுகளை பூர்த்தி செய்வதற்கும், இரு அணிகளும் நடவடிக்கைகளை எடுத்தே ஆகவேண்டும். தமது வெற்றிகளை நிலைக்கச் செய்யவேண்டிய பொறுப்பு - இரு நாடுகளுக்கும் உண்டு. செய்வார்களா......?

**- வெண்மதி -**

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அரங்கில் - நம்பிக்கைதரும் பல்வேறு நிகழ்வுகள் விடிவெள்ளிகளாக 2003 ஆம் ஆண்டில் தோன்றியுள்ளது. அகில இலங்கை 'எவரெடி' வெள்ளிக்கிண்ணத்துக்கான, 19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட போட்டியில்- யாழ்.மாவட்ட இளைஞர் அணி - மன்னார், கிளிநொச்சி, பருத்தித்துறை அணிகளை வெற்றிகொணடு, இறுதிச்சுற்றுக்கு வடக்கிலிருந்து தெரிவு செய்யப்படும் வாய்ப்பைப்பெற்றுள்ளது. இதில் மன்னார் மாவட்டத்தின் புனித சவேரியார் கல்லூரி அணியின் - அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டப்போட்டியில் வெற்றிபெற்று, 2003 இல் அகில இலங்கை பாடசாலை சம்பியனாக இருந்தது. இந்த அணியில் பல வீரர்களைக்கொண்ட, மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அணியை, யாழ். இளைஞர் அணி 3-2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றமை குறிப்பிடும்படியான ஒன்றாகும்.



சரியான கரங்களில் பொறுப்பு

இதனைவிட, வட-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கான போட்டியில் சம்பியனாகியது மன்னார் புனித சவேரியார் கல்லூரி அணி. இந்த அணியே அகில இலங்கையில்

# இந்த எழுச்சியை முழுமையாக்குவோம்

சம்பியனாகியது. வட-கிழக்கு மாகாணப் போட்டியில், பல்வேறு முன்னணி அணிகளைப் புறந்தள்ளி, இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்ட ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மீண்டும் வீறுடன் எழப்போகும் யாழ்.மாவட்ட பாடசாலைகள் அணிகளுக்கு, இது ஓர் எடுத்துக்காட்டாகும். பலமுறை அகிலஇலங்கை பாடசாலைகளுக்கிடையே சாம்பியனாகிய வரலாறு- இளவாலை கென்றியரசர் கல்லூரி, புனித சம்பத்திரிசியார் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி என்பவற்றிற்குண்டு. மீண்டும் அந்த உதைபந்தாட்டத்தின் பொற்காலம் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் நடைபெறும் அந்த போட்டிகளின் காலம் திரும்புமா என்பதே, உதைபந்தாட்ட ஆர்வலர்கள் எல்லோரின் கேள்வியாகவும் உள்ளது.



203 நாடுகளில் இருநூறு மில்லியனுக்கும் மேற்பட்டவர்களால், இன்றும் ஆடப்படும் இந்த ஆட்டம் - எங்கள் தமிழர் தாயகத்திலிருந்து, எப படி ஒதுக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு விளையாட்டமைச்சினால் நடத்தப்பட்ட அகிலஇலங்கைப்போட்டியின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம், கொழும்பு மாவட்டங்களுக்கிடையே நடைபெற்றதையும், அந்த ஆட்டத்தில், யாழ்.மாவட்டம் 4-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றிருந்ததையும், எமது மக்களில் பலர் மறந்து போய்விட்டார்கள். நாவாந்துறை மணி எனப்படுபவரின் வேகமும், வலிமையும் நிறைந்த முன்னணி ஆட்டக்காரர்களின் ஆடுதிறனைப் பலர் இப்போது மறந்துபோய் விட்டார்கள்.

யுத்தம் அது எம்மீது ஏற்படுத்திய கொடிய நடவடிக்கைகளும், எமது உதைபந்தாட்டத்தை எம்மிடமிருந்து பறித்து, உயிர்வாழ்தலே எம்முன் கேள்விக்குறியாக எழுந்த போது, உதைபந்தாட்டம் எம்மைவிட்டு தூரவிலகியது. இனவாதம் எமது வீரர்களுக்குரிய புதிய நுட்பமுறைகள் கிடைப்பதைத் தடுத்தது. எமது வீரர்கள் அகிலஇலங்கை அணிகளில் புறந்தள்ளப்பட்டனர். குடாநாட்டு எல்லைகளுக்குள் மட்டுமே முடக்கப்பட்ட இவ்வாட்



மறக்க முடியுமா

டத்தில் சீரழிவுக்கு எமது உதைபந்தாட்ட வீரர்கள், நடுவர்கள், ரசிகர்கள் போன்றோரின் முறையற்ற நடத்தைகளும் மேலும் காரணமாகியது.

வெல்வதற்காக விளையாடுங்கள் (**Play to win**), நேர்மையுடன் ஆடுங்கள் (**Play fair**), ஆட்ட விதிகளில் அவதானமாயிருங்கள் (**Observe the Laws of the game**). சகவீரன், எதிரணி ஆட்டக்காரன், மத்தியஸ்தர், இரசிகர்களுடன் கௌரவமாக நடந்து கொள்ளுங்கள் (**Respect opponents team, maters References, officials and the spectatos**) தோல்விகளையும் கௌரவத்தோடு, ஏற்றுக்கொள்ளுங்கள் (**Accept defeat with dignity**) - என்பனவே உதைபந்தாட்டத்தை உன்னதத்திற்கு எடுத்துச செல்லும் அடிப்படை கோட்பாடுகளாகும். எனவே, இவற்றை மனதிற்கொண்டு கௌரவமான உதைபந்தாட்டக்காரனாக செயற்படுவதே தமிழீழத்தின் முதன்மை விளையாட்டான உதைபந்தாட்டத்தின் மேன்மையினூடாக, எமது தேசிய கௌரவத்தையும் நிலைநிறுத்தும் வழியாகும் என்றார், தமிழீழ விளையாட்டுத்துறையின் பொறுப்பாளர் சி.பாப்பா. சின்னஞ்சிறிய தேசமான எமது தாயகத்தின் இருப்பை - அதன் கௌரவத்தை உலகிற்கு உணர்த்துவதற்கு, விளையாட்டு ஒரு சிறந்த ஊடகம். இதன் வளர்ச்சிக்கு உழைப்பதற்காகவே, எமது தேசியத் தலைவர் விளையாட்டுத்துறையை உருவாக்கினார் எனவும் தெரிவித்தார்.

அண்மையில் மிகநீண்டகாலங்களின் பின், யாழ். மாவட்டத்தில் மிக அதிகமான உதைபந்தாட்ட அணி கலந்துகொண்ட சுற்றுப்போட்டி ஒன்று, கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடந்து முடிந்தது. யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் என்பவற்றிலிருந்து, 52 அணிகள் கலந்து கொண்ட 51 போட்டிகளும், எந்தவித பிரச்சினையும் இல்லாமல் சிறப்பாக நடந்து முடிந்தது. இது எல்லைப்படை மாவீரர்களின் அர்ப்பணிப்பின் புனிதத்துக்கு, எமது மக்கள் செலுத்திய அஞ்சலியாகும் என இறுதியாட்டத்தின் பரிசளிப்பு நிகழ்வின் தலைமை உரையில் - வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் புண்ணிய சீலன் தெரிவித்தார். இன்று பெருகிவரும் சமூகச்சீர்கேடுகளிலிருந்து - எமது இளைஞர்களை, எமது எதிர்கால தலை முறையினரைப் பாதுகாப்பதற்கு மிகச்சிறந்த வழி அவர்களைத் தினமும் விளையாட்டு மைதானத்திற்கு அனுப்பிவைப்பதுதான் என்பதை பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்க்கிறேன் என்றார் பாப்பா. விளையாட்டு எப்போதும் கல்விக்கு ஊக்குவிப்பாக அமையுமே அன்றி இடையூறாக அமையாது என்பதை எமது சமூகம் உணரவேண்டும்.

**- அ. அன்ரன் அன்பழகன்**

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்துஆம்
ஆக்கம் பலவும் தரும்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# அரசியல் அதிகாரப் போட்டியும் சமாதான நகர்வின் எதிர்காலமும்

சமாதானப் பேச்சுவார்த்தையின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்ற கேள்விதான் இப்போது சகலர் மனத்தையும் ஆக்கிரமித்துள்ளது எனலாம். இந்தக் கேள்விக்கான பதிலை சமாதானத்தை முன்னெடுப்பதில் ஆர்வமாக, அதற்கான அனுசரணையாளராகவும் தீவிரமாகப் பங்காற்றி தற்போது நிலைமைகளை அவதானித்த வண்ணம் அடுத்த கட்டமாக என்ன செய்வது என ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கும் நோர்வே நாட்டிடம் கேட்பது நியாயமான ஒன்றேயாகும்.

சிறிலங்காவின் ஆளும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு, இது தொடர்பாக பகிரங்கமாகவே தனது அதிகாரமின்மை காரணமாக ஏற்பட்டுள்ள இயலாமையை வெளிப்படுத்திவிட்டுள்ள நிலையில், அவரிடம் சமாதானம் குறித்த எந்தக் கேள்வியையும் கேட்பதில் அர்த்தம் எதுவும் இல்லை.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா அதிகாரங்கள் அனைத்தையும் தான் எடுத்துவைத்துக் கொண்டிருந்தாலும் கூட 'சமாதானம்' என்ற வார்த்தையை மட்டும் வெறுமனே பகட்டுக்கு உச்சரிக்கும் ஒருவராகவே இருக்கின்றாரேயன்றி, அதுகுறித்த முன்னெடுப்புக்களுக்கு அவர் எதுவிதமான முயற்சியையும் எடுக்கும் தற்துணிவு மட்டுமல்ல, விருப்பார்வமும் கூட இல்லாதவராகவே உள்ளார்.

இன்னும் தெளிவாகவே கூறுவதானால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் யாவும் ஓரளவுக்கேனும் நம்பிக்கை தரும் வடயமாக நகர்ந்துகொண்டிருக்கையில், அதனை எப்படியாவது குழப்பியோ, இடைநிறுத்தியோ அதனைச் சாத்தியமற்றதாக்கி விடவேண்டும் என்பதில் தனது ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமருடன் இணைந்து, சில வேளைகளில் நேரடியாகவும் பல வேளைகளில் மறைமுகமாகவும் இயங்கியவர் ஜனாதிபதிதான்.

எனவே, அவரிடம் அமைதிப் பேச்சுக்களின் எதிர்காலம் குறித்து ஏதாவது கேட்டால், ஒரு அழுத்தமான - தெளிவான பதிலைத் அவரிடமிருந்து பெறமுடியாதென்பது சர்வநிச்சயம்.

ஏற்கனவே நாட்டின் பாதுகாப்பு சீர்குலைந்துவிட்டது என்று கூறி, பீதியை ஏற்படுத்திக்கொண்டே, தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி, தனது அரசியல் அதிரடி நடவடிக்கைகளைத் தொடங்கிய ஜனாதிபதியின் பிரதான தாக்குதல் இலக்காக சமாதான முன்னெடுப்பே இருந்தது. அதாவது ரணிலின் ஆட்சியின் அதிகாரவலுவை, சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்கும் வலுவைத் தகர்த்துவிட்டால், அவரால் அதனை அடுத்தகட்டத்திற்கு மேல் நகர்த்த முடியாது என்பதை நன்கு தெளிவாகவே தெரிந்துகொண்டிருந்த ஜனாதிபதி, அதன் அடிப்படையிலேயே தன் அதிகாரத்தைப் பயன்படுத்தினார் என்பதில் கருத்துவேறுபாட்டிற்கு இடமில்லை.

இந்த நிலையில் சமாதானம் குறித்த எதுவிதமான உறுதியான கருத்தியல் நோக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் அவரிடம் கிடையாது என்றே கூறவேண்டும். அடுத்து ஒரு யுத்தத்துக்கான தயாரிப்பு நடவடிக்கையிலேயே, தேசிய பாதுகாப்புக்கான செயற்பாடுகள் என்று கூறிக்கொண்டு, அவர் தொடர்ந்தும் முனைப்பாகச் செயற்படுவதும் உணரக்கூடியதாகவே உள்ளது.

ஆகவே, இவர்களுக்கு அப்பால் தென்பகுதியில் சமாதான உணர்வுள்ள அரசியல்வாதிகள், அமைப்புக்கள், மதநிறுவனங்கள் அனைத்தும் அமைதி முயற்சிகளின் எதிர்காலம் குறித்து சந்தேகத்தை வெளிப்படுத்தும் பலவீனமான அமைப்புக்களாகவே உள்ள அதேசமயம் பேரினவாத சக்திகளும், அமைப்புக்களும் சமாதானத்தை வெளிப்படையாகவே எதிர்ப்பதுடன் நிராகரித்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், சமாதான நகர்வுகளின் பிரதான பங்காளியான விடுதலைப் புலிகள் மட்டுமே, அதிகார பலமுள்ள, நியாயபூர்வமான பேச்சுக்களில் கலந்துகொள்ளக்கூடிய மனோநிலையுடன் கூடிய, யாருடனும் பேசத் தயாரெனத் தெரிவித்துள்ளதன் மூலம் தமது நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவித்துவிட்டுள்ள நிலையில், அவர்களிடம் சமாதானம் குறித்த கேள்வி எதனையும் எழுப்பவேண்டிய அவசியமே இல்லாமற்போய்விட்டுள்ளது.

ஆகவே, கேள்வி சமாதான ஏற்பாட்டாளர்கள் நோக்கிக் கேட்கப்படுவதும் தவிர்க்கப்படமுடியாத ஒன்றே...

இப்படியான கேள்வி ஒன்றிற்கான பதிலாக நோர்வே தூதரக அதிகாரி ஒருவர் ஊடகவியலாளர்களிடம் கூறிய விடயம், கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்றேயாகும்.

"தெற்கில் அரசியல் அதிகாரப் போட்டி நிறுத்தப்படும் வரை பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது கடினமாகும்... இலங்கையின் தலைவர் பிரதமரா, ஜனாதிபதியா என்பது முதலில் தெளிவாக வேண்டும்." - என்ற அவரின் கருத்து சர்வதேசத்திற்கு ஒரு சில முக்கிய செய்திகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

- இலங்கையின் சமாதானத்திற்கு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகாரப் போட்டியே இடையூறாக உள்ளது.
- இலங்கையின் ஆட்சித் தலைவர் யார் என்பது தெளிவற்றதாக உள்ளது.
- சமாதான நகர்வு முன்னெடுக்கப்பட ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடைியில் இணக்கம் அவசியம் - இல்லையேல் அமைதி முயற்சிகள் வெற்றிபெறுவதற்கான சாத்தியம் இல்லை.
- ஆகியவையே அந்தச் செய்திகளாகும்.

ஆகவே உலக சமூகம் வலியுறுத்தும் சமாதான முயற்சிகளின் தேக்கநிலைக்கு சிறிலங்கா அரசாங்கமே..... ஜனாதிபதியையும் உள்ளடக்கிய அதிகாரபீடமே..... முற்றுமுழுதான காரணம் என்பதை நோர்வே தூதரக அதிகாரி மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளார் என்றே கூறவேண்டும்.

## நாடும் நடப்பும்




# முன்பள்ளியில் கல்வி திணிக்கப்படுவதால் சிறுவர்களுக்கு அழுத்தங்கள் ஏற்படுகின்றன!

### வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தெரிவிப்பு

மாணவர்களுக்கு சுமையைக்கூட்டி, கல்வியை திணிக்கும் போது, அவர்கள் சிறுவயதிலேயே அழுத்தங்களுக்குள்ளாகி, மனசுமைகளுக்குள்ளாகி விடுகிறார்கள். இது அவர்களின் எதிர்கால வாழ்க்கையை பாதித்துவிடுகின்றது.

இவ்வாறு கெருடாவில் அம்பிகை சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்க முன்பள்ளி பரிசளிப்பு விழாவில், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட, வடமராட்சி கல்விக்கழக பொறுப்பாளர் கே.தாயகன் தெரிவித்தார். சங்கத்தலைவர் குணசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தொடர்ந்து தாயகன் உரையாற்றும்போது,

முன்பள்ளிச்சிறார்கள் சந்தோசமாகவும், அவர்கள் விரும்பிய படியும் கற்கவிடவேண்டும். அவர்களுக்கு கல்வியென்றுகூறி, தேவையற்ற கருத்துக்களைத் திணிக்கக்கூடாது. பெற்றோர்கள் இந்த விடயத்தில் மிகக்கண்காணிப்புடன் செயற்படவேண்டும்.

இன்றைய சிறார்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டின் தலைவர்கள் இந்தச்சிறுவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறப்பாக மேற்கொள்ளப்படவேண்டும். முன்பள்ளிச் சிறார்களைக்கூட சில பெற்றோர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்கு அனுப்புகின்றனர். இது மிகக்கவலைக்குரியதாகும்.

மாணவர்களுக்கு சுமையைக்கூட்டி, கல்வியைத் திணிக்கும்போது, அவர்கள் சிறுவயதிலேயே அழுத்தங்களுக்குள்ளாகி, மனச்சுமைகளுக்குள்ளாகி விடுகின்றார்கள். இது அவர்களின் எதிர்கால வாழ்க்கையைப் பாதித்து விடுகின்றது. இந்தச்சிறுவர்கள் ஆடிப்பாடி சந்தோசமாக கற்பதற்கான சூழல் உருவாக்கப்படவேண்டும். முன்பள்ளி ஆசிரியர்கள் இதனைச் சிறப்பாக செய்யவேண்டும். அப்போதுதான் நாங்கள் நற்பிரஜைகளை உருவாக்கமுடியும். அவர்கள் எமது நாட்டை சிறப்பாக வழிநடாத்திச் செல்லமுடியும் எனத்தெரிவித்தார். (17)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நலத்திட்டம்

ஒஸ்லோ, பேர்லின் போன்ற இடங்களில் விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது, விடுதலைப்புலிகளால் யுத்தகாலத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சம்பந்தமாக பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. இதனையடுத்து, போரினால் பாதிக்கப்பட்ட எட்டுமாவட்டங்களில், இந்தச் சிறுவர் நலத்திட்டமானது யுனிசெப் நிறுவனத்துடன், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்வை, இயல்பு நிலைக்கு கொண்டு வருவதே இதன் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தினூடே பெற்றோரை இழந்த, தனிமைப்படுத்தப்பட்ட சிறுவர், வறுமையான சிறுவர், உடல் உள தாக்கமடைந்தோர், ஊட்டம் குறைந்தோர், பாடசாலை செல்லாதோர், இடைவிலகல் மாணவர், தெருவோர சிறுவர், வேலைக்கமர்த்தப்பட்ட சிறுவர் மற்றும் வயது குறைந்த போராட்டத்தில் இணைந்தோர் போன்றோர் இதில் உள்ளடக்கப்படுகின்றார்கள்.

இந்தத் செயற்திட்ட வடிவத்தை கடந்த யூன் மாதம கொழும்பில் அரசு, விடுதலைப்புலிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், சர்வதேச தொழில் ஸ்தாபனம் போன்ற அமைப்புக்கள் கூட்டாக இணைந்து மேற்கொண்டன. கடந்த ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இந்தத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயற்பட ஆரம்பித்துள்ளது. இதில் மாவட்டத்திலுள்ள ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் ஏனைய சிறுவர் திட்ட அமைப்புக்களும் இணைந்து இத்திட்டத்தை மேற்கொள்கின்றன.

# இரு குழுக்களிடையே மோதல் ஒன்பது வீடுகள் தீக்கிரையாகின

### புத்தளம் பகுதியில் சம்பவம்

புத்தளம் பொலிஸ் பிரிவில் உள்ள புழுதிவயல் பகுதியில் இரு குழுக்களக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து, ஒன்பது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இரு குழுக்களக்கிடையே நீண்டகாலமாக நிலவிவந்த பகைமை காரணமாக, நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு ஏற்பட்ட மோதல் ஒன்றின் போதே, இவ்வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை வீடொன்றினுள் பெறுமதிவாய்ந்த உடமைகளும் சேதத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக, புத்தளம் பொலிஸார் - ஒருவரைக் கைதுசெய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் நடாத்திவருகின்றனர். அத்தோடு பிரதேசத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (01)

# நெடுந்தீவில் எய்ட்ஸ் விழிப்புணர்வு இன்று தொடக்கம் ஆரம்பமாகும்

எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகள் - நெடுந்தீவுப் பகுதியில் இன்று தொடக்கம் மேலும் ஐந்து நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறவுள்ளன. இன்று மாலை 2 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கூட்டமொன்றில், இந்த நடவடிக்கை தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

அதன் பின்னர் வீடு வீடாகச் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகவும், இச்செயற்பாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் மற்றும் சுகாதார சேவையினருடன், தேசிய எழுச்சிப் பேரவையினர், பொது அமைப்புக்கள் என்பனவும் ஈடுபடவுள்ளன. (113)

# கேணல் கிட்டு ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டிகள்

கேணல் கிட்டுவின் 11ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 10 ஆம்,13 ஆம் திகதிகளில், கிளிநொச்சி மத்தியவிளையாட்டு மைதானத்தில், சுழற்சிமுறையில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. மாவட்டரீதியாக மாவீரர்கள் வெற்றிக் கிண்ணப்போட்டிகளில் கலந்துகொண்ட சிறந்த அணிகள் இதில் பங்குபற்றவுள்ளன. இந்தப்போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது

## தெற்குத்திசையிலிருந்து...

# ரணில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்தியா கைகொடுக்குமா?

**- இந்திரஜித் -**

நாட்டில் இனப்பிரச்சினை, அதன் தீர்வு என்பவற்றிற்கு அப்பால் - நடைமுறை பிரச்சினைகள் பெரிதுபடுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசியம் மக்கள் மத்தியில் இருந்து மறைக்கப்பட்டு வருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுப் பேச்சுவார்த்தை





கள், இடையில் தடைப்பட்டு, தற்சமயம் பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், அதன் தாக்கத்தை எவரும் உணரவில்லை.

ஒரளவான இயல்பு வாழ்க்கை ஒன்று இருப்பதை ஏற்றுக்கொண்டுள்ள எல்லோருமே, அதன் வழியில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும், இந்த இயல்பு வாழ்க்கைக்கான நிரந்தரத் தீர்வு குறித்து எவரும் அக்கறை கொள்ளவில்லை.

இனப்பிரச்சினையையடுத்து இரண்டாவது பிரச்சினையாக - தற்சமயம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான அதிகாரப்போட்டி உருவாகியுள்ளது. இந்த அதிகாரப் போட்டிக்கு இதுவரை தீர்வு எட்டப்படுமா? என்ற வாய்ப்புக்கூட எழவில்லை எனக் கூறலாம்.

இந்நிலையில், தென்னிலங்கையில் மதக் கலவரங்கள் உருவாகும்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 12 ஆம் திகதி, கங்கொடவில சோமதேரர் - ரஷ்யாவில் காலமானதைத் தொடர்ந்து, இந்த நிலைமை உருவாகியுள்ளது. கங்கொடவில சோமதேரர் காலமான விதம் எவ்வாறு என்பது இதுவரை வெளிப்படாமல் இருந்து வருகிறது.

ஆனால், அந்த மரணம் குறித்த ஊகங்கள், இலங்கையில் பாரிய மதக்கலவரங்களுக்குச் செல்லக்கூடிய வகையில், பௌத்த அடிப்படைவாதிகளால் நகர்த்தப்பட்டுள்ளன. இதில் சிஹல உறுமய போன்ற அரசியற்கட்சிகளும் இணைந்துகொண்டு, தமது பரசாரங்களை முன்கொண்டு செல்கின்றன.

கங்கொடவில சோமதேரரின் பூதவுடல் - கடந்த 21 ஆம் திகதி தகனம் செய்யப்படவிருந்தது. எனினும், அரசியல் கட்சிகள் மற்றும் பௌத்த அடிப்படைவாதிகளின் வலியுறுத்தலின் பேரிலேயே, கிறிஸ்தவர்களின் நத்தார் தினத்திற்கு முதல்நாள் அது தகனம் செய்யப்படவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கான கலந்தாலோசனை கொழும்பிலுள்ள பௌத்தமத ஸ்தாபனம் ஒன்றில் இடம்பெற்றது. அதேநேரம் கிறிஸ்தவ மதத்தலங்களை தாக்கும் திட்டம் ஒன்றும் பௌத்த அடிப்படைவாதிகளால் தீட்டப்பட்டது. ஆனால், இது ஜனாதிபதிக்குத் தெரியவரவே, அரசியல் நலன்கருதி அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பாக சிஹல உறுமய - தற்போதைய சூழ்நிலையில், ஜனாதிபதியுடன் அரசியல் மோதலை ஏற்படுத்திக்கொண்டால், அது தமது கட்சி வளர்ச்சிக்குப் பாதிப்பாக அமைந்துவிடும் என்ற காரணத்தை முன்வைத்து, குறிப்பிட்ட திட்டத்தை செயற்படுத்த முனையவில்லை.

தேசிய நலன் என்ற போர்வையில், இலங்கையில் பௌத்த அடிப்படைவாதம் பரப்பப்படுமானால், அது இலங்கையை மேலும் பல வருடங்களுக்கு பின்னடையச் செய்துவிடும்.

இந்தியா வல்லரசாக இருக்கின்றபோதும், அங்கு இடையிடையே இடம்பெறுகின்ற மதக் கலவரங்கள், அந்த நாட்டையே அழிவுக்கு இட்டுச்செல்கிறது என்பது வெளிப்படை.

அரசியல் தருணத்துக்காக மதங்களைத் தூக்கிப்பிடிப்பது யதார்த்தமாகாது. அது இலங்கையர்களுக்கிடையில், பாரிய பிளவுகளைக் கொண்டுவரப் போகிறது. ஏற்கனவே தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என நீண்டதூர இடைவெளியில் பிரிந்துநிற்கும் இலங்கையர்கள் - மதவாத அடிப்படையில் பிரிந்து செயற்படுவார்களானால், நாட்டின் நிர்வாகம் மீளமுடியாத நிலைக்குச் சென்றுவிடும்.

எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் அவசியமானதாகும். மதக்கலவரங்களுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்ற தகவல்களுக்கு அப்பால், இந்த நாடு சிங்கள நாடு எனவும், பௌத்தர்களைத் தவிர ஏனையவர்கள் குறைந்தவர்கள் - அதாவது ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்றும், பௌத்த அடிப்படைவாதிகள் பிரசாரம் மேற்கொண்டனர்.

எனினும், மதக்கலவரங்களைப் பாரியளவில் (வென்னப்புவ துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தவிர) இடம்பெறாமை இலங்கை மீண்டுமொருமுறை பாதாள உலகத்துக்குச் செல்லும் வழியில் இருந்து மீண்டமைக்குச் சமனாகும்.

இனி, நாம் தென்னிலங்கையின் அரசியலைப் பார்ப்போம். இனப்பிரச்சினைத் தீர்வுப் பேச்சுவார்த்தையை இடையில் நிறுத்தும் அளவிற்கு விஸ்வரூபம் எடுத்துள்ள - ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான அரசியல் முறுகல் தீர்க்கப்படுமா என்பது இன்னமும் தொக்கிநிற்கும் கேள்வியாகும்.

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் - அவருக்கும், பிரதமருக்குமிடையில் பலசுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்று முடிந்துவிட்டன. எனினும், இணக்கம் எவையுமில்லை.


இரண்டு தரப்புமே தங்களின் சுய அரசியல் சாணக்கியத்தையும், சாதுரியத்தையும் பயன்படுத்தி, மக்கள் மனதை வெல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

கடந்த நவம்பர் முதல்வாரம் முதல் இதுவரையில், இதில் இரண்டு தரப்புமே வெற்றி காணவில்லை. அதற்குப் பதிலாக தமக்கிடையிலான இடைவெளியை அதிகரித்துக்கொண்டுள்ளன. அதிகாரம் யார் கையில் என்ற போராட்டம் காரணமாக, மக்கள் பகடைக் காய்களாக மாற்றப்பட்டுள்ளனர். வாழ்க்கைச் செலவு உயர்ந்து செல்கிறது. தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள யுத்தம் மீண்டும் இடம்பெறாது என சொல்லிக்கொண்டாலும், அது நிரந்தரமாக இடம்பெறாதா? என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையே பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாமல், அதனை மலிக் சமரவிக்கிரம மற்றும் மனோ தித்தவெல குழுவிடம் ஒப்படைத்தனர். இந்தக் குழுவும் தமக்குள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் வெற்றிகாணவில்லை.

இதற்கு மத்தியில், இலங்கையின் அரசியல் முறுகல் தீர்க்கப்பட்டால் மாத்திரமே, நலிந்துபோயிருக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கு, வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கும் என்ற வலியுறுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, ரோக்கியோ நிதியுதவி வழங்கும் நாடுகள் - இலங்கையின் அரசியல் முறுகல் தீர்க்கப்படவேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றன.

இது இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்ட பிரச்சினையாகையால், அந்த நாடுகளால் அரசியல் முறுகலைத் தீர்க்கக்கூடிய வாய்ப்புக்கள் எவையுமில்லை. அண்மையில்



இந்தியா இந்த விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கப்போவதாகத் தகவல்கள் வெளியான போதும், இந்தியாவுக்கு அதற்கான அவசியம் என்ன என்பது கேள்வியாகியுள்ளது.

இந்திய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பித்த மக்கள் விடுதலை முன்னணியை இந்தியா அழைத்துப் பேசியது (அண்மையில் இந்திய உயர் ஸ்தானிகர் நிருபன் சென் கொழும்பில் தேச அபிமானிகள் என்ற அமைப்பின் சார்பில், மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலர் விமல் வீரவன்சவைச் சந்தித்தமை) இதற்கு உதாரணமாகும்.


ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் முறுகல் காரணமாக, ஐரோப்பிய நாடுகள் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வெளிப்படையான ஆதரவு தெரிவிக்கும் நிலைக்கு வந்துள்ளமை, இந்தியாவைப் பொறுத்தவரையில் ஆத்திரமூட்டும் செயலே. ஆனால், அதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்துப் பேசப்படும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரும் அல்லது இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முன்னெடுப்புக்களில், அவருக்கு உதவும் நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபடுமா? என்பது சந்தேகமே.

தற்சமயம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவைத் தொடர்புபடுத்தி, முன்னெடுப்புக்களை மேற்கொள்ள ஜனாதிபதியின் தரப்பு முயற்சிக்கிறது. இதற்கு இன்னமும் உரிய ஆதரவு கிடைக்கவில்லை. அதுவரை தென்னிலங்கையில் தம்மை அரசியல்ரீதியாக பலப்படுத்திக்கொள்ளும் முனைப்புகளில் ஜனாதிபதியின் தரப்பு ஈடுபட்டுள்ளது.

அதற்காகவே மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து செயற்பட அது துணிந்துள்ளது. அதிகாரப் பரவலாக்கத்துக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவில்லை என்றநிலை காணப்பட்டாலும்கூட, 2000 ஆம் ஆண்டு - ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்ட தீர்வுப்பொதியை, மக்கள் விடுதலை முன்னணி ஏற்றுள்ளதாக ஜனாதிபதியின் தரப்புக் கூறுகின்றது.


---

# அமெரிக்கப் படையினரிடம் சதாம். என்ன நடந்தது? இனி....?



ஈராக்கில் முக்கிய நடவடிக்கை ஒன்றிற்காகத் திட்டமிட்ட ஒபரேசனுக்குச் சூட்டப்பட்ட பெயர் 'ரெட் டோன்'. அமெரிக்கப் படைகளின் 4 வது காலாற்படைப் பிரிவிலிருந்து பொறுக்கியெடுத்துத் தயார்நிலையில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 600.

அவர்களுக்குப் பக்கத்துணை



வழங்க விசேட படையணியும், ஆட்லறியும்- வானிலிருந்து பாதுகாப்பு கொடுக்கப் போர் விமானங்கள். அதுவரை அதில் சம்பந்தப்பட்ட யாருக்குமே தெரிந்திராத ஒரு விடயம். தேடுதல் எங்கு நடைபெறப் போகின்றது என்றோ, தேடப் போகும் நபர் யார் என்றோ தெரியாது. இவர்களைத் தயாராக இருக்கும்படி உத்தரவு கொடுக்கப்பட்டபோது டிசம்பர் 19 ஆம் திகதி காலை 3 மணி 25 நிமிடமாகும்.

அமெரிக்கப் படைப்பிரிவின் தலைமைக்குக் கிடைத்த முக்கியதுப்பு -தொலைபேசி மூலமாகவோ, ரேடியோ மூலமாகவோ சொல்லப்படாமல், உளவுப் பிரிவின கொமாண்டரால் நேரடியாகச் சென்று, பூட்டிய அறைக்குள் வைத்துச் சொல்லப்பட்டபோது நேரம் - 13 ஆம் திகதி காலை 10.15 ஆகும்.

ரெட்டோன் ஒப்பரேசனில் கொடுக்கப்பட்ட இலக்குகள் இரண்டு. அத்தலாவின் அருகருகேயுள்ள இரண்டு பண்ணைப் பகுதிகள். சதாமின் சொந்த ஊருக்குச் சுமார் 15 கிலோ மீற்றருக்கு உட்பட்ட பகுதி.

குறிப்பிட்ட இலக்குகளை அடைந்த படைகள் - அந்தப் பகுதிகளைச் சுற்றிவளைக்கப்பட்டபோது நேரம் மாலை 5.55. மாலை 6.20 இற்கு இரு இலக்குகளும் இருக்கும் இடத்திற்குச் செல்லும் பாதைகள் எல்லாமே அடைக்கப்பட்டன. வீதிகளில் நடமாடிய எல்லோரும் வீடுகளுக்குப் போகும்படி, துப்பாக்கிமுனையில் கூறப்பட்டது. அமெரிக்கப்படைகள் கூறும்வரை, யாரும் வீட்டுக்கு வெளியில் தலைகாட்டக்கூடாது என்று, ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்ட போது நேரம் மாலை 6.35.

இரவு 7.30 மணிக்குத் தேடுதல் முழுமூச்சாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. சந்தேகத்திற்கு இடமான பொருட்கள் எதுவும் சிக்கவில்லை. அமெரிக்கப் படைகள் தேடிய ஆட்கள் எவரும் அகப்படவுமில்லை.

இரவு 8.10 மணிக்கு தேடுதல் நடவடிக்கை மிகவும் மந்தப்படுத்தப்பட்டது. சந்தேகத்துக்கு இடமான பொருட்கள் எதுவுமே இல்லையென்று, தேடுதல் முனையிலிருந்து முகாமிற்கு அறிவித்துவிட்டு, தேடுதலை முடித்து அவர்கள் திரும்பலாமா என்று அனுமதி கேட்கப்பட்டது.

முகாமில் உடனடியாக ரேடியோ தகவல்கள்மூலம் கிடைத்த புலனாய்வுத் தகவல் - உளவுப் பிரிவிற்குக் கிடைத்த தகவல், நிச்சயமான உறுதியான துப்பு - தொடர்ந்தும் தேடுங்கள் என்று ஒலித்தது.

சரியாக 8 மணி 26 நிமிடம் - நிலத்தின் கீழிருந்த 6x8 அடி அளவிலான பதுங்குகுழி ஒன்றிலிருந்து அமெரிக்கப் படைகளால் சதாம் கைதுசெய்யப்பட்டார்.

உலகின் முதன்மை இராணுவம் சுமார் எட்டு மாதங்களாகத் தேடப்பட்டுவந்த 'இலக்கு நம்பர் வன்' - அவரது வாயிலிருந்து வந்த முதல் வார்த்தைகள் 'ஐ ஆம் சதாம் ஹுசைன் பிறசிடன்ட் றிபப்ளிக் ஒப் ஈராக். -

சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்டார் என்ற தகவலை முதன்முதலில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டவர் - அமெரிக்கப் படைகளின் 'ரொப் மான் இன் ஈராக் போல் பிளேமர்'. மாதக்கணக்கில் காத்துக்கொண்டிருந்த, இதே இந்த வார்த்தைகளைச் சொல்வதற்காக. இதோ இந்த வார்த்தையைச் சொல்வதற்காகவே - 'லேடீஸ் அன் ஜென்ரில் மென் வீ கொட் கிம்' (**Ladies and gentilman - we got him**).

சர்வதேச சகலகலா வல்லவர்களின் வசம் சதாம் ஹுசைன். சில விபரீதமான, வில்லங்கமான, சந்தேகங்கள் - சதாம் ஹுசைன் அமெரிக்கப் படைகளால் பிடிக்கப்பட்டார், சிறைப்பட்டார், அகப்பட்டார்.....

(தொடரும்...)

**கனடாவிலிருந்து ரிஷி**

# ஈராக்கில் நடந்த தாக்குதல்களில் பதின்மூன்று பேர் கொல்லப்பட்டனர்!

## 37 கூட்டணிப் படைகள் உட்பட 172 பேர் படுகாயம்



ஈராக்கின் கர்பலா நகரில் நேற்று நடத்தப்பட்ட இரண்டு கார்க்குண்டு மற்றும் றொக்கட் தாக்குதல்களில் 13 பேர் கொல்லப்பட்டதுடன் 172 பேர் படுகாயமடைந்தனர்.

இரு தாக்குதல்கள் கூட்டுப்படையினரின் முகாமகள் அமைந்துள்ள நகரசபை கட்டடத்தின் மீதும், மற்றைய தாக்குதல் பொலிஸ் நிலையத்தின் மீதும் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ முகாமை தகர்ப்பதற்கு வெடிமருந்து நிரப்பிய கார் ஒன்று முகாம் பிரதேசத்துக்குள் புகமுயன்றவேளை, ஏற்பட்ட மோதலில் கார் முகாமிற்கு வெளியே வெடித்துச் சிதறிவிட்டதாகவும், இதன்போது தற்கொலைதாரி கொல்லப்பட்டதாகவும் அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

அத்துடன், நகரசபைத் தலைவரின் கட்டடம் மீது மேற்கொள்ளப்பட்ட ரொக்கெற் தாக்குதலில் - அந்தக் கட்டடம் தீப்பற்றி எரிந்ததாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தாக்குதல்களில் கூட்டணிப் படைகளின் பல்கேரியா நாட்டைச் சேர்ந்த 4 இராணுவத்தினரும், தாய்லாந்தைச் சேர்ந்த 2 இராணுவத்தினரும் 6 ஈராக்கியர்களும் தற்கொலைதாரி ஒருவர் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர். 37 கூட்டணிப் படையினர் உட்பட 172 பேர் புடுகாயமடைந்தனர்.




# அஸாம் போராளிக் குழுவின் தலைவர் இந்தியாவிடம் சரண்

(சென்னை)

இந்திய மாநிலமான அஸாமின் பிரிவினைவாத அமைப்பான ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் 'பிம்காந்த புறகோகைன்' பூட்டான் படையினருனான மோதலில் கொல்லப்பட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது இந்தியப் படையினரிடம் அவர் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அஸாம் மாநிலத்தின் சுதந்திரத்திற்காக பூட்டனைத் தளமாகக்கொண்டு இந்தியாவிற்கு எதிராக இவர் போராட்டம் நடத்தி வந்தார் எனக் கூறப்படுகிறது.

78 வயதான புறகோகைன் இந்தியப் படையினரிடம் சரணடைந்த பின் அஸாம் மாநிலத்தின் வடகிழக்குப்பகுதியில் உரையாற்றினார்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் அஸாம் மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுவிடமுடியாதெனவும், ஆயுதங்களைக் கைவிட்டு இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் எனவும், தனது போராளிக்குழு உறுப்பினருக்குத் வேண்டுகோள் விடுத்தார்.

# கலிபோர்னிய மாநிலத்தில் ஏற்பட்ட சேற்றுமண்சரிவில் சிக்கி 7 பேர் பலி!



அமெரிக்க மாநிலமான கலிபோர்னியாவில் தொடர்ந்து பெய்த கடும் மழையினை அடுத்து ஏற்பட்ட சேற்றுமண்சரிவில் சிக்கி உயிரிந்த ஏழு பேரின் உடல்களை மீட்புப் பணியாளர்கள் மீட்டுள்ளனர்.

கலிபோர்னியாவில் அமைந்துள்ள முகாம்களில் இருந்தோரே இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களாவர்.


இந்த மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் அதிகளவிலான மரங்கள் கருகிச் சாம்பலாகியிருந்தன. இதனால் மண் இறுக்கமற்றுப் போனதாலேயே மழைவெள்ளத்துடன், மணலும் அள்ளுப்பட்டு சேற்று நீராகப் பாய்ந்தோடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப் பணியாளர்கள் 14 பேரை காப்பாற்றியுள்ளனர். சேற்றுநீர் தொடர்ந்தும் பாய்ந்த வண்ணம் உள்ளதால் மீட்புப் பணியில் ஈடுபடமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தடுப்புச் சுவர் அமைப்பதை எதிர்த்து

# ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது இஸ்ரேல் படையினர் துப்பாக்கிச் சூடு

## இருவர் காயமடைந்தனர்



(ஜெருசேலம்)

இஸ்ரேலிய அரசினால் அமைக்கப்பட்டுவரும் தடுப்புச்சுவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்குக்கரைப் பகுதியில் மகாசி என்ற இஸ்ரேலியப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட அமைதி ஊர்வலத்தின் மீது - இஸ்ரேலியப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது வெளிநாட்டுப் பெண் ஒருவரும், இஸ்ரேலியர் ஒருவரும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைதிக்காகப்போராடும் சில அமைப்புக்கள் இந்த ஊர்வலத்தை நடத்தியிருந்தன.

இதேவேளை, இந்த ஊர்வலத்தை நடத்தியவர்கள் பாதுகாப்புச் சுவரைப் பிரித்து முன்னேற முற்பட்டவேளையில் துப்பாக்கிப்பிரயோகத்தை தாம் மேற்கொண்டதாக, இஸ்ரேலியப் படையினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் எதுவித முன்னெச்சரிக்கையும் தெரிவிக்காது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டதாக அந்த ஊர்வலத்தில் பங்குகொண்டவர்கள் இஸ்ரேலியப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபை - இஸ்ரேலின் மேற்குக்கரை, காஸா ஆகிய பிரதேசங்களில் பாதுகாப்புவேலி அமைப்பதைக் கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அணு ஆயுத அமைப்புக்கள் தொடர்பாக ஆராய

# ஐக்கிய நாடுகள் சபையின் குழு லிபியாவுக்குச் செல்லவுள்ளது!



ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி அமைப்பின் தலைவர் மொகமட் எல்பராடி தலைமையிலான குழுவொன்று - லிபியாவின் அணுசக்தி தொடர்பான அமைப்புக்களை பார்வையிடுவதற்கு செவ்வாய்க்கிழமை அந்த நாட்டிற்குச் செல்லத் திட்டமிட்டுள்ளது.

பேராபத்தைத் தரக்கூடிய அணுஆயுதங்களை வைத்திருக்கப்போவதில்லை என்று அண்மையில் லிபியா தெரிவித்திருந்தது.

அத்துடன் ஐ.நாவின் பாதுகாப்புச்சபை உறுப்பினர்களையும் நிபந்தனையின்றி தமது நாட்டில் தேடுதல் நடத்துவதற்கு அனுமதிக்கவுள்ளதாகவும் லிபியா அறிவித்திருந்தது.

இதனை அடுத்தே ஐ.நாவின் குழு லிபியாவிற்குச் செல்லவுள்ளது. இந்த விஜயம் குறித்து எல்பராடி கருத்துத் தெரிவிக்கும்போது,

லிபியாவின் கடந்தகால, தற்கால அணுசக்தி தொடர்பான செயற்பாடுகளை முதலில் அறிந்துகொண்டபின்பே, வருங்காலத்தில் எந்தவிதமான சோதனைகளை அங்கு மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அணுசக்தி தொடர்பான சில விபரங்களை தாம் இதுவரை தெரிவிக்கவில்லை என, லிபியா தம்மிடம் தெரிவித்துள்ளதாகவும் எல்பராடி தெரிவித்தார்.மார்ச் மாதம் நடக்கவுள்ள கூட்டத்தில் இந்த மேலதிக விபரங்களை லிபியா தெரிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக - அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளுடன் லிபியா நடத்திய இரகசியப் பேச்சுவார்த்தைகளின் பின்பே, பேரழிவைத்தரும் ஆயுதங்களைக் கைவிடுவதென்ற முடிவினை எடுத்திருந்தது.

# பூகம்பக் காட்சிகள்











மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குடாநாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு அரசாங்கம் ஒரு சதமும் வழங்கவில்லை!

## தென்மராட்சியில் அரச அதிபர் பத்மநாதன் உரை

(தென்மராட்சி)

குடாநாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென அரசு கடந்த இரண்டு வருடங்களாக ஒரு சதத்தையேனும் வழங்கியிருக்கவில்லை. இவ்வாறு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான வேலைத் திட்டங்களை இனங்காண்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்றுக் காலை சாவச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி பிரதேச செயலர் க.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன், திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப்பெறுப்பாளர் செம்மணன், தென்மராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்களது தலைவர்கள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்

அங்கு உரையாற்றிய யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது இடம் பெறுவது யுத்தத்தின் பின்னரான சமாதானம் நோக்கிய பயணம். ஆனால், அது எப்படியிருக்குமென எவருக்குமே தெரியவில்லை. இவ்வாறான சிக்கல் நிலையொன்று இலங்கை வரலாற்றில் முன்னர் இடம்பெற்றிருக்கவில்லை. தற்போதுகூட முழுமையாக யுத்தம் நிறுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோல், முழுமையான சமாதானமும் ஏற்பட்டிருக்கவில்லை. உலகவங்கியுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளக்கூடிய தகுதியான ஒப்பந்தங்கள் குடாநாட்டில் தற்போது இல்லை கடந்த இருபது வருடகால யுத்தத்தால் அவர்கள் அற்றுப்போயுள்ளனர்.

ஆனாலும், கட்டடப்பணியாளர்கள் மற்றும் மணல் போன்ற பொருட்களுக்கும் இதேபோன்று நெருக்கடி நிலவுகின்றது.

இதேவேளை, கிராம மட்டங்களில் இருந்து தேவைகளை கண்டறிய இவ்வாறான தேசிய எழுச்சிப் பேரவைகள் அவசியமானவை. அடுத்துவரும் ஆண்டுகளில் தென்மராட்சிப் பகுதிகளின் அபிவிருத்திக்கு கூடுதல் கவனம் செலுத்தவுள்ளோம் என மேலும் தெரிவித்தார்.

(202,34,25)

## நாற்சந்தி



'என்ன மணியம் கடும் யோசனையோடு காலம்பறவே தலையில கைவைச்சு சோகமா குந்திக்கொண்டு இருக்கிறாய்?'

நேற்று பின்னேரம் மூக்குமுட்டக் குடிச்சிட்டு படுத்த உனக்கு உலக நடப்பு எங்கை தெரியப் போகுது கனகு... ஈரானிலை பூகம்பம் வந்தெல்லே பல்லாயிரக் கணக்கிலை சனம் செத்துப்போச்சு... பாவம் என்னென்ன கனவுகளோடு நித்திரைக்கு போச்சுதுகளோ...!'

'அட கடவுளே... சத்தியமாய் எனக்கொண்டும் தெரியாது மணியம். நான் இப்பத்தான் எழும்பி நேரா தேத்தண்ணிக் கடைக்கு வாறன்...'

'இடிபாடுகளுக்கை இன்னும் எத்தனை ஆயிரம் பேர் [illegible]க்கினமோ தெரியல்லை... இப்படியும் ஒரு விதியோ...?'

'முந்தியும் ஒருக்கா ஈரானிலை பூகம்பம் சந்து ஆயிரக்கணக்கிலை சனம் அழிஞ்சதெல்லே...!'

'ஓமோம்... இயற்கை அந்தச் சனத்தை நிம்மதியா இருக்க விடுகுதில்லை.'

'இதுக்கு எங்களாலை என்ன செய்யமுடியும் மணியம்... காலம் கலிகாலமெல்லே... மனிசன் இயற்கையை வெல்லமுடியாது'.

'சும்மா இப்பிடி தத்துவம் பேசாதை கனகு... இயற்கையோடு போராடித்தான் வாழவேணும் தெரியுமே... எங்கடை நாட்டிலையும் போராலை எத்தனை ஆயிரம் தமிழ்ச்சனம் இல்லாமல் போயிட்டினம்... இதுவும் தலைவிதியெண்டே சொல்லப்போறாய்... அல்லது கலிகாலம் என்று பேசாமல் இருக்கப்போறாயோ...?'

'என்னாலை உன்னோட தர்க்கம் செய்யமுடியாது... மணியம்... உன்னைப்போல துயரம் வந்தால் கவலைப்பட்டுக் கொண்டு பேசாமல் என்னால் இருக்கமுடியாது...!'

'அப்ப என்ன செய்யப் போறாய்'

கவலை கூடீட்டா... நாலு போத்தல் கூட கள்ளடிச்சுட்டுப் போய் படுத்திடுவன்... அவ்வளவுதான்...'

'இதாலைதானே எங்கட கஸ்ரங்களுக்கு ஒரு முடிவில்லாமல் போகுது...! போய் அந்த மக்களின் அமைதிக்கா பிரார்த்தனையாவது செய்...'

தெருவாசி

# எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம் நேற்றும் குடாநாட்டில் தீவிரம்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ அரசியற்துறையினரும், தமிழீழ சுகாதாரப் பிரிவினரும் இணைந்து நடாத்திவரும் எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்றும் தொடர்ந்தன.

நேற்றைய தினம் கோப்பாய், சங்கானை யாழ். நல்லூர் கோட்டம், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உடுவில் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

கோப்பாய் பிரதேசத்தில் மக்களின் வீடுகளுக்குச் சென்ற விழிப்புணர்வு பிரிவினர் எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினர்.

இதில் - தேசிய எழுச்சிப் பேரவையினர், கிராம சேவையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சங்கானைப் பிரதேசத்தில்- சங்கானை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்ற எய்ட்ஸ் விழிப்புணர்வு பொதுக்கூட்டத்தில், தமிழீழ சுகாதார சேவையினர் எய்ட்ஸ் நோய் பற்றிய கருத்துக்களை வழங்கியதுடன், பொதுமக்களின் கேள்விகளுக்கும் விளக்கமளித்தனர்.

யாழ்.நல்லூர் கோட்டத்தில் சுகாதார குழுவினரால்- மத்திய கல்லூரி, தனியார் கல்வி நிறுவனங்களிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெற்றன. இவற்றைவிட 2953 குடும்பங்களின் வீடுகளுக்கு சென்று எய்ட்ஸ் விழிப்புணர்வு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தினரால் எய்ட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான நாடகம் நாவாந்துறை, திருநெல்வேலி, கல்வியங்காட்டுப் பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த நாடகம் தொடர்பாக மக்கள் கருத்து தெரிவிக்கையில் இந்த நாடகத்தில் கூடுதலான விளக்கம் இருந்ததாகத் தெரிவித்தனர்.

தெல்லிப்பளைப் பிரதேசத்தில்- தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுடனும், மல்லாகம் வணிகர் மன்றத்துடனும், கோணம்புலம் இடம்பெயர்ந்தோர் நிலையத்திலும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்து எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் இடம்பெற்றன.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் ஆலங்குழாய கிராம தாய்சேய் நல இல்லத்திலும் பண்டத்தரிப்பு தாய்சேய் நல நிலையத்திலும், பண்டத்தரிப்பு ப.நோ.கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுடனும் எயட்ஸ் விழிப்புணர்வு கலந்துரையாடல்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

உடுவில் பிரதேசத்தில் - குப்பிளான் பாரதி, கலைமதி ஆகிய சன சமூக நிலையங்களிலும் எய்ட்ஸ் நோயின் தடுப்பு அதன் சமூகப் பாதுகாப்புகள் குறித்த கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இவ்வாறாக யாழ். குடாநாடெங்கும் எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

## கூட்டணி எம்.பிக்களை வைத்து...

பயங்கரவாத நடவடிக்கைகளால் என்னைப் பயமுறுத்துவதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு, இந்த உலகத்தில் எதிர்காலம் என்பது இல்லை. அவர்கள் விரைவில் சர்வதேச நாடுகளால் நிர்மூலமாக்கப்படுவார்கள்.

அத்துடன், அநியாயமான முறையில் பெருமளவில் பொதுமக்களைக் கொன்றும், அரசியல் படுகொலைகளைச் செய்யும் பயங்கரவாதிகள் ஒருநாள் அதற்கான பதிலைக் கூறியே ஆகவேண்டும். இவர்கள் ஐ.நா. சபையால் நிர்வகிக்கப்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிலோ, அல்லது விசேட நீதிமன்றம் ஒன்றில் வைத்தோ, அவர்கள் அதற்கான காரணத்தைச் சொல்லியே தீரவேண்டும். இவர்கள் வருங்காலத்தில் தொடர்ந்தும் வாழமுடியாது.

இலங்கையில் நடக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளை - சர்வதேச சமூகம், குறிப்பாக அமெரிக்கா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

1999 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால், நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்ட பின்னர், அடுத்ததாக அவர்களின் முன்னுரிமையான கொலைப்பட்டியலில் சம்பந்தனின் பெயரே இருந்தது. இது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இவர் அப்போது கட்சியின் உபதலைவர் நிலையில் இருந்து கொண்டு, விடுதலைப் புலிகளால் தனது உயிருக்கு ஏற்படவிருக்கும் ஆபத்திலிருந்து தன்னைப் பாதுகாக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகாவைக் கேட்டுக்கொண்டார்.

அதற்கிணங்க அன்றைய நிலையில் - சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாதிருந்தும், ஜனாதிபதி சந்திரிகாவினால் - அவருக்கு அரசாங்க வீடு, சன்னந் துளைக்க முடியாத கார், மெய்ப்பாதுகாவலர்கள் என்பன வழங்கப்பட்டன.

அதன்பின் நடந்த பொதுத்தேர்தலில் சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தும், அக்காலத்தில் பிரதமராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க சம்பந்தன் பயன்படுத்தும் வீடு மற்றும் சகல வசதிகளுக்கும், அனுமதி கொடுத்திருந்தார்.

2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நியூயோர்க்கில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்கு, என்னையும் ஒரு பிரதிநிதியாக அரசாங்கம் தேர்ந்தெடுத்தது. ஆனால், திடீரென கிளிநொச்சியிலிருந்து மிரட்டும் பாணியில் பல தொலைபேசி அழைப்புக்கள் எனக்கு வந்தன. இதில் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கும் இந்தக் கூட்டத்திற்குச் செல்லவேண்டாம் எனக் கூறப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நான் கட்டாயம் கலந்துகொள்வேன். தமிழர் விடுதலைக் கூட்டணி உங்களைப் போன்ற அமைப்புகளுக்கு அடிபணியமாட்டாதெனவும் தெரிவித்தேன்.

அதன்பின், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்து, என்னைக் கூட்டத்திற்கு செல்லவேண்டாமெனக் கூறினர். அதற்கு நான் அவர்களுடன் ஒரு சமரசத்திற்கு வந்தேன்.

அவர்களுக்கு நான் சொன்னேன்- பிரதமர் ரணில் தலைமையில் நான் கூட்டத்திற்கு கட்டாயம் செல்வேன். ஆனால், அங்கு உரையாற்ற மாட்டேன் எனத் தெரிவித்தேன். அதனை அந்த உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர். அதன்படி நியூயோர்க் கூட்டத்திற்கு சென்றேன். ஆனால் உரையாற்றவில்லை.

இரண்டாவது சர்வதேச மாநாடு நவம்பர் மாதம் 2002 ஆம் ஆண்டு பாங்கொக்கில் நடந்தது. அதற்கு நான் ரவிராஜூடன் சென்றேன். இதில் செல்வம் அடைக்கலநாதன், தங்க வடிவேல் ஆகியோரும் வந்திருந்தனர். நாம் நால்வரும் மலேசிய துணை அமைச்சரைச் சந்தித்து, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கைப் புனரமைக்க உதவிசெய்யுமாறு கேட்டோம்.

ஆனால், இதனைவிட நாம் வேறு எதனையும் கேட்கமுடியவில்லை. ஏனெனில் வேறு உதவிகளைக் கேட்கவேண்டாமென நாம் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தோம்.

நான் கொல்லப்பட்டாலோ அல்லது அவ்வாறான சம்பவம் ஏதாவது எனக்கு நடந்தாலோ அதற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு. எனவே, சர்வதேச சமூகம் இவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தச் சூழலிலும் அவர்களைத் தப்பவிடக்கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பயணிகள் படகுச்சேவை படையினரால் வழிமறிப்பு

(குறிகட்டுவான்)

குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற பயணிகள் படகினை கடற்படையினர் நடுக்கடலில் மறித்து அச்சுறுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு இந்தச்சம்பவம் நடைபெற்றது. இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற உதயதாரகை என்ற படகே இவ்வாறு கடற்படையினரால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டது. அத்துடன், அந்த இடத்தில் வைத்துச் சோதனையிட முயன்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈரானில் நடந்த...

இதன்படி சுமார் 40,000 பேர் வரை இந்தப் பூமியதிர்ச்சியில் இறந்திருக்கலாம் என்று அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர்.

கட்டடச் சிதைவுகளிலிருந்து சடலங்கள் மீட்கப்பட்டு வருவதால், பாம் நகரில் எங்கும் அழுகுரல்கள் கேட்பதாகவும், ஈரான் நாடே சோகத்தில் மூழ்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாம் நகரில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் மரணம் நேர்ந்திருப்பதால், ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் கூறக்கூட முடியாநிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் தவிப்பதாக அங்கிருக்கும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பூமியதிர்ச்சியில் வீடுகளை இழந்தவர்கள் கடும் குளிரில் பரந்த வெளிகளில் தங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது.

மேலும், இந்த அனர்த்தத்தில் காயமுற்றோருக்கு சிகிச்சை வழங்குவதில் பெரும் இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அனர்த்தத்தை தேசிய பேரழிவாக பிரகடனம் செய்துள்ள ஈரானிய ஜனாதிபதி முகமட் கதாமி- நாட்டில் அவசரகாலநிலையை பிரகடனம் செய்துள்ளார்.

இதேவேளை, பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ உலகின் பல்வேறு நாடுகளும் - அரசியல் வேறுபாடுகளை மறந்து முன்வந்துள்ளன.

அத்துடன், அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின், இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் அவசர உதவிப் பணிகள் மற்றும் உதவிப் பொருட்களையும் ஈரானுக்கு அனுப்பியுள்ளன.

## புத்தளத்தில்...

வர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கற்பிட்டி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கற்பிட்டி வைத்தியசாலையில் இருந்து காயமுற்ற நான்கு பேர் புத்தளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

(01)

## மதங்களுக்...

பீரிஸ் சொன்னார்.

மதங்களுக்கிடையே ஏற்படுகின்ற மோதல்களைத் தவிர்க்க ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து நடக்க வேண்டும். யுத்தத்தினால் பாதிப்புற்றுள்ள எந்தவொரு நாட்டுக்கும் இவ்வாறான மத மோதல்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் தெரிவித்தார்.

## சமாதானப் பேச்சுக்கள்...

மைப்பு என்ன நடவடிக்கை எடுப்பது பற்றி விரைவில் கூடி ஆராயவுள்ளது.

இனப் பிரச்சினை தீர்வில் சர்வதேச அழுத்தம், உள்ளூர் அழுத்தம் கொடுப்பது பற்றி ஆராய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலவற்றிற்கிடையே இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் போராட்டங்களை நடத்துவதன் ஊடாக மட்டும் சர்வதேச கவனத்தை ஈர்க்க முடியாது என்றும், கொழும்பில் போராட்டங்களை நடத்துவதன் ஊடாகவே சர்வதேச கவனத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும், கருதுவதால் கொழும்பை மையமாக வைத்து போராட்டங்களை நடத்துவது தொடர்பாக தமிழ் கூட்டமைப்பு ஆராயும்.

இனப் பிரச்சினை தொடர்பாக தமது கவனத்தைக் காட்டுவதைவிட பிரதமரும், ஜனாதிபதியும் தமது அதிகாரங்கள் மீதே கவனத்தைக் காட்டிவருகின்றார்கள். அதற்காக தேர்தலைப் பற்றி சிந்திக்கின்ற நிலைக்குக் கூட அவர்கள் சென்று விட்டார்கள். தமிழர்களின் நலனில் ஜனாதிபதியோ, பிரதமரோ முக்கிய கவனங்களை கொண்டிருக்கவில்லை எனவும், மாவை. சேனாதிராஜா குற்றம்சாட்டினார்.

(01)

## குருநகர்...

தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதால், அந்தப் பிரதேசத்திற்குள் இழுவை இயந்திரப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்க வேண்டாமென பள்ளிக்குடா மீனவர்கள், பிடித்த நான்கு மீனவர்களையும் எச்சரிக்கைசெய்து விடுவித்தனர்.

நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்ட இவர்கள் - தரைவழியாக நேற்று யாழ் வந்தனர்.

(206)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.